www.padippakam.com

ஜூன் 2005

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



முசுலீம் பெண்களே,
மதச்சார்பற்ற
சிவில்
சட்டத்திற்காகப்
போராடுங்கள்!




இந்திய நீதிமன்றங்கள்:

## பன்னாட்டு முதலாளிகளின் கைப்பாவை

படிப்பகம்

www.padippakam.com

## பாப்பாபட்டி – கீரிப்பட்டி:

# "வன்கொடுமைக்கு முடிவு கட்டுவோம்!"

## – புரட்சிகர அமைப்புகளின் போராட்ட அறைகூவல்

மதுரை மாவட்டம், உசிலை வட்டத்திலுள்ள ரிசர்வ் தொகுதியான கீரிப்பட்டியில் 1996 முதல் 19 முறை பஞ்சாயத்து தேர்தல் அறிவிக்கப்பட்டும், அந்த பஞ்சாயத்துத் தலைவர் நாற்காலியில் ஒரு தலித் அமர முடியவில்லை. பாப்பாபட்டியில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் நின்ற நரசிங்கம் என்ற தலித் வேட்பாளர் மர்மமான முறையில் இறந்துள்ளார். நாட்டார்மங்கலம் தொகுதியில் யாரும் வேட்பு மனுக் கூடத் தாக்கல் செய்யவில்லை.

இது ஒரு போலி ஜனநாயகம் என்பதை 19-வது முறையாக நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் கீரிப்பட்டியின் சாதிவெறியர்கள். தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தனித் தொகுதியான கீரிப்பட்டியில் ஆதிக்க சாதியினரான பிரன்மலைக் கள்ளர்களால் நிறுத்தி வைக்கப்பட்ட திரு. அழகுமலை என்ற தலித் வேட்பாளர், வெற்றி பெற்று பஞ்சாயத்துத் தலைவர் பதவியை ஏற்ற மறுகணமே அதனை ராஜினாமா செய்திருக்கிறார்; செய்ய வைக்கப்பட்டிருக்கிறார்.

''அரசியல் சட்டம் தலித் மக்களுக்கு வழங்கியுள்ள ஜனநாயக உரிமையைப் பகிரங்கமாக பறிக்கிறார்கள் கீரிப்பட்டியின் சாதிவெறியர்கள். இதற்காக, அவர்களுடைய வாக்குரிமை ரத்து செய்யப்பட வேண்டும். தலித் மக்களுக்கான தனித்தொகுதியை இட ஒதுக்கீட்டை மறுக்கும் கீரிப்பட்டியின் பிரன்மலைக் கள்ளர் சாதியினர் அனைவருக்கும் இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட வேண்டும். தங்களுடைய நிலவுடைமை ஆதிக்க பலத்தைக் கொண்டு தலித் மக்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்து அவர்களுடைய வாழ்வுரிமையைப் பறிக்கிறார்கள் சாதிவெறியர்கள். எனவே அவர்களுடைய நிலம், மின்சாரம், சாலை, வங்கிக் கடன் போன்ற அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு அவர்கள் தனிமைப் படுத்தப்பட வேண்டும்.''

''இவை மிகையான கோரிக்கைகள் அல்ல; எத்தகைய வன்முறைகளை அவர்கள் தலித் மக்கள் மீது ஏவுகிறார்களோ, அந்த வன்முறையின் வலியை அவர்கள் அனுபவிக்க வேண்டும். கீரிப்பட்டியின் சாதிவெறியர்களைத் தீண்டத்தகாதவர்களாக்கி இந்த நாடே வெறுத்தொதுக்க வேண்டும்'' என்று மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி மற்றும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் தமிழகம் முழுவதும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன. துண்டு பிரசுரம், தெருமுனைக் கூட்டம், ஆர்ப்பாட்டம் என்று பல வடிவங்களில் சாதிவெறியர்களின் அக்கிரமங்களை மக்களிடம் எடுத்து சென்றனர்.

துண்டைத் தோளில் கூடப் போட்டுக் கொள்ள முடியாமல், பணிவோடு கையில் போட்டுக் கொண்டு பதவி உறுதிமொழி ஏற்கும் அழகுமலை (நடுவில்). கள்ளர் சாதிவெறியர்களின் அச்சுறுத்தல் அரசு அலுவலகத்தில் கூட ஊடுருவி நிற்கிறது. (படஉதவி: இந்தியாடுடே)



16.05.05 அன்று உசிலம்பட்டியில் ஆர்.டி.ஓ. அலுவலகம் எதிரிலும் 17.05.05 அன்று மதுரையில், தல்லாகுளம் தபால்-தந்தி அலுவலகம் முன்பும் தொடர் முழக்க ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

பல்வேறு ஜனநாயகச் சக்திகள் ஊக்கமுடன் முன்வந்து போராட்டத்திற்குத் தோள் கொடுத்து உதவினர். மனித உரிமை பாதுகாப்பு மையம், மதுரை வழக்குரைஞர்கள் சங்கம், விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் வழக்குரைஞர்கள் பிரிவு, திராவிடர் கழகத்தின் மாநில சட்டத்துறை பிரிவு மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு பேரவை ஆகிய அமைப்புகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்து சாதிவெறியர்களுக்கு எதிராகத் திரளுமாறு மக்களை அறைகூவி அழைத்தனர்.

''இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டை எதிர்க்கும் கீரிப்பட்டி பிரன்மலைக் கள்ளர்களின் சாதி இறுமாப்பு, சாதி வெறியாட்டததுக்குக் கைக்கட்டிச் சேவகம் செய்யும் அரசு

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 8**

ஜூன் 2005

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**அட்டை ஓவியம்:**
**முகிலன்**

***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


# பா.ஜ.க. வழியில் காங்கிரசு ஆட்சி - இதுதான் ஓராண்டு 'சாதனை'!

நாட்டை மீண்டும் காலனியாக்குவதில் போலி கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருகிறது, காங்கிரசு கூட்டணி ஆட்சி. காப்புரிமைச் சட்டத் திருத்தம், மதிப்புக் கூட்டு வரி விதிப்பு, ஜவுளி - பின்னலாடை ஏற்றுமதிக்கு இருந்து வந்த "கோட்டா" முறை ரத்து, புதிய ஓய்வூதியச் சட்டம், புதிய விதைச் சட்டம், புதிய சந்தைச் சட்டம் - என உலக வர்த்தகக் கழக ஒப்பந்தப்படி இந்தியப் பொருளாதாரத்தை இந்த ஆண்டிற்குள் முற்றிலுமாக மாற்றியமைக்கும் வேகத்தோடு அடுத்தடுத்து தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது.

இதுவும் போதாதென்று சில்லறை வியாபாரத்தைக் கல்லறைக்கு அனுப்பும் முடிவோடு, சில்லறை வியாபாரத்தில் 26 சதவீத அன்னிய முதலீட்டுக்கு அனுமதியளிக்கத் தீர்மானித்துள்ளது. மளிகைக் கடை, பெட்டிக்கடை என ஏறத்தாழ 4 கோடி குடும்பங்களின் (16 கோடிப் பேரின்) வாழ்க்கைக்கான ஒரே ஆதாரமாக இருப்பது சில்லறை வியாபாரக் கடைகள்தான். வால் மார்ட், மோரிஸ்-ஸ்பென்சர் முதலான பன்னாட்டு பகாசுர அங்காடிகளை இத்துறையில் அனுமதிப்பதன் மூலம் கோடிக்கணக்கான சிறுகடை வியாபாரிகளின் எதிர்கால வாழ்வைப் பறித்து மரணக் குழியில் தள்ளி விட்டுள்ளது, காங்கிரசு கூட்டணி ஆட்சி.

காங்கிரசு கூட்டணி, பதவிக்கு வந்த அடுத்த சில நாட்களிலேயே டெல்லி மற்றும் மும்பய் விமான நிலையங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்கப் போவதாக அறிவித்தது. அதன்பிறகு, கட்டுமானத் துறையில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதியளிக்கப் போவதாக அறிவித்தது. விவசாயத் துறையில் 14 சதவீத அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறது. கமுக்கமாக, இராணுவத் தளவாட உற்பத்தியைத் தனியாரிடம் ஒப்படைப்பது பற்றி விவாதித்து வருகிறது. இவ்வளவும் போதாதென்று, கடந்த மூன்றாண்டுகளாக சராசரியாக 15 சதவீத அளவுக்கு இலாபமீட்டி வரும் அரசுத்துறை நிறுவனங்களையும் அடிமாட்டு விலைக்குத் தனியாருக்கு விற்கக் கிளம்பிவிட்டது.

நவரத்தினங்கள் என்றழைக்கப்படும் இந்தியாவின் ஒன்பது மிகப்பெரிய அரசுத்துறை நிறுவனங்களுள் ஒன்றான பாரத மிகு மின் நிறுவனத்தின் ("பெல்") அரசுப் பங்குகளில் 10 சதவீதத்தைத் தனியாருக்கு விற்றுவிட முடிவு செய்துள்ளதாக நிதியமைச்சர் அண்மையில் அறிவித்துள்ளார். பட்ஜெட்டில் இத்தகைய கொள்கை முடிவுகள் பற்றி எந்த அறிவிப்பும் இல்லாத போதிலும், கொல்லைப்புறமாக இவற்றைக் கொண்டுவந்து, தனியார்மய - தாராளமயத் தாக்குதலைத் தீவிரப்படுத்தி வருகிறது காங்கிரசு கூட்டணி ஆட்சி.

இந்த லட்சணத்தில், தனது ஓராண்டு நிறைவு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறது, இக்கூட்டணி ஆட்சி. பயங்கரவாத "பொடா" சட்டம் நீக்கப்பட்டிருப்பது, தகவல் அறியும் உரிமையளிக்கும் சட்டம், சமூக நலத்திட்டங்கள் மற்றும் விவசாயத்துக்கான முதலீடு அதிகரிப்பு, சேது சமுத்திர திட்டம், தமிழ் செம்மொழியாக ஏற்பு, தகவல் - தொழில்நுட்பத் துறையின் சேவை விரிவாக்கம், வரியில்லாத பட்ஜெட், அண்டை நாடுகளுடன் நல்லுறவு - என ஓராண்டுச் 'சாதனை'களைப் பட்டியலிட்டுப் பெருமிதம் கொள்கிறது.

"பொடா" சட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதே தவிர, பொடா வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை. இப்பாசிச சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்டுள்ள - சிறையிலிடப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்படவுமில்லை. பொடாவை விடக் கொடிய "ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம்" நீக்கப்படவில்லை. இச்சட்டத்தின் அதிகாரத்தைக் கொண்டு வடகிழக்கு மாநிலங்களில் கொலைவெறி - காமவெறியாட்டங்களில் ஈடுபட்டு வரும் இந்திய இராணுவத்தைத் தடுக்கவோ தண்டிக்கவோ எந்த நடவடிக்கையுமில்லை.

பா.ஜ.க.வின் இந்துத்துவ வகுப்புவாதத்தை வீழ்த்தவே இந்த மதச்சார்பற்ற கூட்டணி என்று போலி கம்யூனிஸ்டுகளால் தாங்கிப் பிடிக்கப்படும் இந்த ஆட்சியானது, பா.ஜ.க. ஆட்சியில் பாடநூல்களில் திணிக்கப்பட்ட இந்துவெறி கறைகளில் ஒருசிலவற்றை நீக்கியதற்கு மேல், இந்துவெறி பயங்கரவாத சக்திகளை முடமாக்க உருப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஓராண்டில் மட்டும் உள்ளூர் அளவிலான 40-க்கும் மேற்பட்ட இந்துவெறித் தாக்குதல்களும் கலவரங்களும் நடந்து தற்காலிகமாகத் தணிந்துள்ளனவே தவிர, எந்தவொரு இந்துவெறியனும்

தொடர்ச்சி 15-ஆம் பக்கம்

www.padippakam.com

# இந்திய நீதிமன்றங்கள்:

# பன்னாட்டு முதலாளிகளின் கைப்பாவை

நிலத்தடி நீர் வளமிக்க கேரளத்தின் பாலக்காடு மாவட்டம், சித்தூர் தாலுகா, பிளாச்சிமடா கிராமத்தின் நீர் வளத்தை இரண்டே ஆண்டுகளில் சூறையாடியதோடு, விளைநிலங்களையும் தனது கழிவு நீரால் நாசமாக்கியிருக்கிறது கொக்கோ கோலா ஆலை. குறிப்பிட்ட வரம்புக்கு மேல் நீரை உறிஞ்சக் கூடாதென்று கேரள உயர்நீதி மன்றத்தின் நீதிபதி பாலகிருஷ்ணன் நாயர் டிசம்பர் 13, 2003 அன்று விதித்திருந்த தடையை எதிர்த்து மேல் முறையீடு செய்த கொக்கோ கோலா நிறுவனம், கடந்த ஏப்ரல் 7-ம் தேதியன்று தனக்குச் சாதகமான தீர்ப்பை வாங்கி விட்டது.

நீதிபதிகள் இராமச்சந்திரன், பாலச்சந்திரன் ஆகியோரடங்கிய கேரள உயர்நீதி மன்ற பெஞ்சு வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு, இந்தியாவின் ஜனநாயகம்; உள்ளூர் நீர் ஆதாரங்களின் மீது பஞ்சாயத்துகளுக்கும் அதன் வழி மக்களுக்கும் உள்ள உரிமை ஆகியவை பற்றி இதுகாறும் பரப்பப்பட்டு வந்த பிரமைகள் அனைத்தையும் தகர்த்திருப்பதுடன், உலக வர்த்தகக் கழகத்தின் கிளையாகவே ஒரு உயர்நீதி மன்றம் இயங்க முடியும் என்பதையும் நிரூபித்திருக்கிறது.

''நிலத்தடி நீரை உறிஞ்சுவது சட்ட விரோதம் என்ற (முந்தைய) தீர்ப்பை அங்கீகரிக்க எந்தவிதமான நியாயமும் இருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. தண்ணீர் எடுப்பதென்பது புதையல் எடுப்பதா என்ன? இந்த (தண்ணீர்) 'செல்வத்தை' எடுக்க கொக்கோ கோலாவிற்கு சட்டப்படி உரிமை யில்லை என்ற தீர்ப்பை நாங்கள் ஆதரிக்க முடியாது. சட்டபூர்வமான பொருளில் நிலவும் கொக்கோ கோலா என்ற நபருக்கு (Legal person) இந்த கைய கட்டுப்பாட்டு விதிக்கப்படுமானால், மற்றெல்லா குடிமக்களுக்கும் (Natural person) இதே போன்று கட்டுப்பாடு விதிக்க வேண்டியிருக்கும்.''

''தனியொரு சட்டத்தால் தடை விதிக்கப்படாத வரை, தன்னுடைய சொந்த நிலத்திலிருந்து தண்ணீர் எடுக்க எந்தவொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு.''

''பெரும் மூலதனமிட்டு தண்ணீரை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இந்த ஆலை, மற்றவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் 'தன்னுடைய தாகத்தைத் தணித்துக் கொள்ள' உரிமை உண்டு.''

மேற்படி தீர்ப்பை வழங்கியிருக்கும் நீதிபதிகள் செவ்வாய் கிரகத்திலிருந்து பூமியில் வந்து இறங்கியவர்களோ, பத்து வருடம் 'கோமா'வில் கிடந்து திடீரென்று விழித்து எழுந்தவர்களோ அல்ல. நீர்வளமிக்க பிளாச்சிமடா கிராமத்தின் மக்கள் தங்களது தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்கே லாரித் தண்ணீரை எதிர்பார்த்துக் காத்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதன் விளைவாகத்தான் அந்தப் போராட்டத்தில் இறங்கினர். பிறந்து வளர்ந்த ஊரில் தங்கள் சொந்த நிலம் தரிசாவதையும், அந்நியன் தண்ணீரைக் கொள்ளை கொண்டு போவதையும் மானமுள்ள எந்த மனிதனாலும் சகித்துக் கொள்ள முடியாது.

அந்த வகையில் பிளாச்சிமடா மக்கள் நடத்தி வரும் போராட்டத்தை நாடே அறியும். நீதிபதிகளும் அறிவார்கள். தெரிந்தே வழங்கப்பட்டிருக்கும் இந்தத் தீர்ப்பின் 'நியாயத்தை'ப் புரிந்து கொள்ள பிளாச்சிமடாவின் கதையை வாசகர்கள் நினைவுபடுத்திக் கொள்வது அவசியம்.

•••

கேரள மாநிலத்தின் நெற்களஞ்சியம் பாலக்காடு மாவட்டம். அம்மாவட்டத்தைச் சேர்ந்த சித்தூர் தாலுகா ''நெற்களஞ்சியத்தின் நெற்களஞ்சியம்'' என்று பெயர் பெற்றது. கேரளத்தின் முக்கிய ஆறான பாரதப் புழா, அதன் கிளை ஆறுகளான காயத்ரிப் புழா, சித்தூர்ப் புழா, கல்பாதிப் புழா, தொடுபுழா போன்ற ஆறுகளும் பாயும் இந்த மாவட்டத்தில் விளையாதது எதுவுமில்லை எனலாம்.

நெல், தென்னை, கடலை, பருத்தி, கரும்பு, வாழை, மிளகு, கேழ்வரகு, மா, ஆரஞ்சு, ஏலக்காய், ரப்பர் மற்றும் காய்கனிகள் அனைத்தும் விளையும் இந்த மண்ணில் மார்ச் 2000-இல் காலடி வைத்தது கொக்கோ கோலா.

முப்போகம் விளைந்து கொண்

பொதுச் சொத்தான தண்ணீரைப் பாதுகாக்க மறுக்கும் அரசு, தண்ணீரைக் கொள்ளையடிக்கும் கொக்கோ-கோலாவின் பிளாச்சிமடா ஆலைக்குப் போலீசைக் குவித்துப் பாதுகாப்பு அளிக்கிறது.






படிப்பகம்

www.padippakam.com



கொக்கோ-கோலாவின் பிளாச்சிமடா ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் நச்சுக் கழிவைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்து, கேரள அரசின் தலைமைச் செயலகம் முன்பு கூட்டு நடவடிக்கைக் குழுவினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.

டிருந்த 34 ஏக்கர் நிலத்தை, ஒரு பண்ணையாரிடமிருந்து விலை கொடுத்து வாங்கி, இந்தியாவிலேயே பெரிய ஆலையை பிளாச்சிமடாவில் அமைத்தது. இரண்டே ஆண்டுகளில் பிளாச்சிமடா சுடுகாடாகத் தொடங்கியது.

ஒரு நாளைக்கு 5 லட்சம் லிட்டர் தண்ணீர் எடுப்பதாக கோக் நிறுவனம் கூறியபோதிலும் அதைச் சோதித்தறிய எந்த ஏற்பாடும் இல்லை. குறைந்தது 15 லட்சம் லிட்டர் நீர் உறிஞ்சப்படுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள் உள்ளூர் மக்கள்.

ஆலைக்கு நிலத்தை விற்ற பண்ணையாரிடம் 1962 முதல் கூலி வேலை செய்து வரும் பழனி, ஒரே வரியில் நிலைமையை விளக்குகிறார். ''அன்று ஒரு ரூபாய் சம்பளம். சோற்றுக்கும் பஞ்சமில்லை. நல்ல தண்ணீருக்கும் அன்று பஞ்சமில்லை. இன்று பண்ணையார் கொடுத்த 5 சென்டு நிலமிருக்கிறது; ஆனால், கிணற்றில் தண்ணீர் இல்லை.''

ஆலைக்கு அருகில் 4 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஷாகுல் ஹமீது ''கடந்த 3 வருடமாக விவசாயமே செய்ய முடியவில்லை. 2001-இல் கூட என்னுடைய பம்புசெட் தொடர்ந்து 16 மணி நேரம் ஓடும். இன்று ஒரு மணி நேரம் கூட ஓட்ட முடியவில்லை. நான் 20 பேருக்கு வேலை கொடுத்தேன். இன்று மாடுகளைக் கூட விற்றுவிட்டேன்; மகனுடைய சம்பளத்தில்தான் நானே வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கிறேன்'' என்று பொருமுகிறார்.

மக்களுடைய எதிர்ப்பின் காரணமாக 2003-ஆம் ஆண்டு கோக் நிறுவனத்தின் உரிமத்தைப் புதுப்பிக்க பிளாச்சிமடா பஞ்சாயத்து மறுத்துவிட்டது. ஆனால், பண பலமும் அதிகார பலமும் கொண்ட கோக், மாநில அரசின் மூலம் பஞ்சாயத்தின் உத்தரவை முடக்கியது. பஞ்சாயத்து முடிவுக்கெதிராக கேரள அரசு தனியாகவே ஒரு அரசாணை பிறப்பித்து, வழக்கம் போல தண்ணீர் எடுக்க கோக்கிற்கு அனுமதி வழங்கியது.

பாசன நீர் இல்லாமல் நிலங்கள் தரிசாய் கிடக்க, குடிநீருக்காக பிளாச்சிமடா மக்கள் 6 கிலோ மீட்டர் நடக்க, லாரி லாரியாக கோக்கின் குளிர்பானங்கள் ஆலையிலிருந்து ஆணவமாக வெளியேறிக் கொண்டிருந்தன.

மாநில அரசின் இந்தக் கைக்கூலித்தனத்தை எதிர்த்து ஏப்ரல் 2003-இல் கேரள உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தது பிளாச்சிமடா பஞ்சாயத்து. டிசம்பர் 13, 2003 அன்று அந்த மனுவின் மீது தீர்ப்பு வழங்கப்பட்டது.

''நிலத்தடி நீர் என்பது பொதுச் சொத்து; அரசு அதன் அறங்காவலர்; மக்கள் நலனுக்கு எதிராக அதனைத் தனியார் சூறையாடுவதற்கு அனுமதி வழங்கும் உரிமை அரசுக்குக் கிடையாது... 34 ஏக்கரில் விவசாயம் செய்தால் எவ்வளவு தண்ணீர் தேவைப்படுமோ அந்த அளவிற்கு மட்டுமே கோக் நிறுவனம் நிலத்தடி நீரை எடுக்கலாம். அதற்கு மேல் தேவைப்படும் நீரைத் தனது சொந்தப் பொறுப்பில் கோக் நிறுவனம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யும் பட்சத்தில் இந்த ஆலை இயங்குவதை பஞ்சாயத்துத் தடுக்கக் கூடாது'' என்று கூறியது அந்தத் தீர்ப்பு.

இந்தத் தீர்ப்புக்கு கோக் கட்டுப்படவில்லை. உடனே மேல்முறையீடு செய்து இடைக்காலத் தடை வாங்கியது. தற்போது ஏப்ரல் 7, 2005 அன்று தனக்குச் சாதகமான தீர்ப்பையும் வாங்கிவிட்டது.

தமது கிராமத்தின் நிலத்தடி நீர் உள்ளிட்ட நீர்வளத்தின் மீது, அந்த கிராமத்து மக்களுக்கோ, பஞ்சாயத்துக்கோ எந்த அதிகாரமும் கிடையாது என்பதை இத்தீர்ப்பு தெளிவுபட அறிவித்துவிட்டது.

அது மட்டுமல்ல, மாநிலமே வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாலும் கோக், பெப்சி போன்ற தண்ணீர்க் கொள்ளையர்கள் நிலத்தடி நீரை உறிஞ்சுவதைத் தடுக்க முடியாதென்பதையும் இத்தீர்ப்பு உறுதி செய்கிறது.

இந்த வழக்கு விசாரணையின் பொருட்டு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட 'நிபுணர்' குழு ''பிளாச்சிமடாவின் தண்ணீர்ப் பஞ்சத்துக்குப் பிரதான காரணம் கோக் அல்ல; பருவமழையின் அளவு குறைந்ததுதான்'' என்று கூறியது.

பிளாச்சிமடா மக்களுக்கு எதிராக இந்த வாதத்தைப் பயன்படுத்திக் கொண்ட நீதிமன்றம், ''ஒரு மாவட்டமே வறட்சியால் குடிநீரு

**தாகத்தால் தவிக்கும் மக்களின் உயிர் வாழும் உரிமையைக் காட்டிலும், இலாபத்துக்காகத் தண்ணீரை உறிஞ்சும் கொக்கோ கோலாவின் சொத்துரிமை நீதிமன்றத்தின் பார்வையில் புனிதமானது.**



படிப்பகம்

www.padippakam.com

மில்லாமல் பரிதவிக்கும் போது, அங்கே குளிர்பான ஆலை நிலத் தடி நீரைச் சுரண்டலாமா?'' என்ற கேள்வியை மட்டும் எழுப்ப வில்லை.

பாலக்காடு உள்ளிட்ட 6 மாவட்டங்களில் தொடர்ந்து பரு வமழை பொய்த்து, 3 ஆண்டு களாக வறட்சி தாண்டவமாடுகி றது; மத்திய அரசுக்குழு அவற்றை 'வறட்சி பாதித்த மாவட்டங்கள்' என்று அறிவித் தும் இருக்கிறது.

முன்னெப்போதும் கண்டிராத அளவு வறட்சி நிலவுவதால் பார தப் புழா ஆற்றிலிருந்து நீர் வழங் கும் 30 குடிநீர்த் திட்டங்கள் மூடப் படும் என்று ஏப்ரல் 2004-இல் மாநில நீர்வளத்துறை அமைச்சர் அறிவித்தி ருக்கிறார். நூற்றுக்கணக்கான கிராமங் கள் குடிநீரில்லாமல் தவித்துக் கொண்டி ருந்த அந்தச் சூழலிலும் கோக் உற்பத்தி நிறுத்தப்படவில்லை.

65 சதவீதத்துக்கு மேற்பட்ட மக் கள், விவசாயத்தைச் சார்ந்து வாழும் பாலக்காடு மாவட்டத்தின் விவசாயி கள், மூன்று பருவங்களாகத் தொடர்ந்து நீடித்த வறட்சியினால் எத்தகைய பாதிப்புக்கு உள்ளாகியிருப்பார் கள் என்பதை விளக்கத் தேவை யில்லை.

ஆனால் மேற்படி நீதிபதிகள், தங்களது தீர்ப்பில் விளக்கம் கேட் கிறார்கள். தொழிலைக் (கோக்) காட்டிலும் விவசாயத்திற்கு ஏன் முன்னுரிமை தரவேண்டுமென் பதை பிளாச்சிமடா பஞ்சாயத்து தெளிவுபடுத்தவில்லையாம்!

''சமூகத்தின் பொதுச் சொத்தா கிய தண்ணீரை ஒரு தனியார் நிறு வனம் தன்னிஷ்டம் போல சூறை யாட முடியாது'' என்று குறிப்பி டும் முந்தைய தீர்ப்பை ஏளனம் செய்கிறார்கள் இந்த நீதிபதிகள்.

''சூக்குமமான கொள்கைக ளின் அடிப்படையில், ஒரு நீதி மன்றம் அடிப்படை உரிமை களை நிராகரிக்க முடியாது'' என்று கூறுகிறார்கள்.

தண்ணீர் பொதுச் சொத்து என் பது சூக்குமமான கொள்கையாம்! ஊரின் நீர்வளம் அனைத்தையும் ஆழ்துளைக் கிணறு போட்டு உறிஞ்சிக் கொள்ளும் உரிமை அடிப்படை உரிமையாம்!


அதாவது, பொதுச் சொத்து

**பொது நலனை முன்னிட்டு வேலை நிறுத்தம், ஊர்வலம், பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதிக்கும் நீதிமன்றங்கள், பொதுநலனை முன்னிட்டு கொக்கோ கோலாவின் தண்ணீர்க் கொள்ளைக்குத் தடை கோரினால், கோலாவின் வர்த்தக சுதந்திரத்தில் தலையிட முடியாது எனத் தீர்ப்பெழுதுகின்றன.**

என்பது சூக்குமமானது; தனிச்சொத்தே பருண்மையானது. தாகத்தால் தவிக் கும் மக்களின் உயிர் வாழும் உரிமை யைக் காட்டிலும், இலாபத்துக்காகத் தண்ணீர் உறிஞ்சும் கொக்கோ கோலா வின் சொத்துரிமை நீதிமன்றத்தின் பார் வையில் புனிதமானது.

புனிதமான அந்த அடிப்படை உரி மையில் லேசாகக் கை வைப்பதாக இருந்தாலும் அரசாங்கம் அதற்காகத் தனிச்சட்டம் இயற்ற வேண்டுமாம். இல்லையேல் நீதிமன்றம் தானாகத்

**கோக் மற்றும் பெப்சியை எதிர்த்து கொச்சி நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது, அக்குளிர்பானங்களின் கிடங்கு அடித்து நொறுக்கப்பட்டது: நாடெங்கும் இத்தீ பரவட்டும்.**



தலையிடவே முடியாதாம்!

குடிமக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பதில்தான் நீதிமன்றத்துக்கு எவ்வளவு அக் கறை! சொத்துரிமை விசயத்தில் மிகவும் 'ஜனநாயகமாக' நடந்து கொள்ளும் நீதிமன்றம், மற்ற அடிப்படை உரிமைகளான பேச் சுரிமை, எழுத்துரிமை, வேலை நிறுத்த உரிமை போன்ற சொற்க ளைக் கேட்டாலே குமுறி எழுகி றது.

பொது நலனை முன்னிட்டு வேலை நிறுத்தத் தடை, ஊர்வலத் துக்குத் தடை, பொதுக் கூட்டங்க ளுக்குத் தடை விதிக்காத நீதிமன் றங்கள் உண்டா?

பொதுநலனை முன்னிட்டு கொக்கோ கோலாவின் தண்ணீர்க் கொள்ளைக்குத் தடை கோரினால், அது மட்டும் முடியாதாம்! ''நாம் அவர் களை அன்புடன் வரவேற்று கணிசமாக முதலீடும் போடச் சொல்லியிருக்கி றோம். அவர்கள் இயங்குவதற்கான சுதந்திரத்தை நாம் உத்திரவாதம் செய்ய வேண்டும்'' என்று தங்களது தீர்ப்பில் பச்சையாகவே சொல்கிறார்கள் நீதிபதி கள்.

நாட்டின் நீர்வளம் அனைத் தையும் அபகரிப்பதற்காகவே காட்ஸ் (GATS) எனும் ஒப்பந்தத் தைத் தயாரித்திருக்கின்றன பன் னாட்டு நிறுவனங்கள். அத்த கைய ஒப்பந்தங்கள் எதுவும் இல் லாமலேயே 'வேலையை'ச் சுளு வாக முடித்துத்தர நமது நீதித் துறை தயாராக இருக்கிறது.

'கோக்' - சமீபத்திய தீர்ப்பு. இதற்கு முன் பால்கோ விற்பனை, ரிலையன்சுக்கு எண்ணெய்க் கிண றுகள் விற்பனை, தொலைபேசி தனியார்மயம், என்ரான் கொள்ளை, யூனியன் கார்பைடு நடத்திய படுகொலை, நகர்ப்புற நிலத்திருட்டு... ஆகிய அனைத்தி லும் நீதித்துறை ஆற்றிய பாத்தி ரம் இதுதான்.

அதிகாரமிருந்தால் ஒரே தீர்ப் பில் இந்தியாவை 'அடிமை நாடு' என்று அறிவிக்கவும் தயங்கமாட் டார்கள் நம் நீதிபதிகள். அப்போ தும் அதனை அரசியல் சட்டத் துக்கு உட்பட்டுத்தான் செய்வார் கள் என்பதை மட்டும் நாம் மறுக்க வியலாது.

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# "நாங்கள் எங்கள் கொள்கையிலிருந்து தலைகீழாக மாறிவிட்டோம்!"

## - மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வரின் ஒப்புதல் வாக்குமூலம்

*"டாடா - பிர்லா கூட்டாளி; பாட்டாளிக்குப் பகையாளி" என்று முன்னொரு காலத்தில் முழங்கிய சி.பி.எம். கட்சி இப்போது, "டாடாவும் பிர்லாவும் எங்கள் பங்காளி; பாட்டாளிகளே பகையாளி" என்று முழக்கமிடத் தயாராகிவிட்டது. தொழிலாளர் போராட்டங்களுக்குத் தடைவிதித்துவிட்டு, அன்னிய நேரடி முதலீடுகளுக்குச்சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும் இப்போலி கம்யூனிஸ்டுகள், மாவீரன் பகத்சிங், வீரபாண்டிய கட்டபொம்மன் வரிசையில் தரகுப் பெரு முதலாளி டாடாவையும் சேர்த்து மாபெரும் நாட்டுப் பற்றாளனாகச் சித்தரித்து புகழாரம் சூட்டுகிறார்கள். கொள்ளைக்கார மோசடி தரகுப் பெருமுதலாளி முகேஷ் அம்பானிக்கு வெட்கமின்றிச் சாமரம் வீசுகிறார்கள். இத்தகைய துரோகத்தனங்களையே அக்கட்சி சித்தாந்தமாகக் கொண்டுள்ளதைப் பகிரங்க வாக்குமூலமாக அளித்துள்ளார், சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும் மே.வங்க முதல்வருமான புத்ததேவ் பட்டாச்சார்யா. "தி வீக்" என்ற ஆங்கில வார ஏட்டுக்கு அவர் அளித்துள்ள நேர்காணல் (மே.29,2005), சி.பி.எம். கட்சியின் யோக்கியதையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளதால், அதன் ஒரு பகுதியை இங்கே வெளியிடுகிறோம். — ஆசிரியர் குழு.*

**• ஏற்கெனவே நீங்கள் இரு அரசுத்துறை நிறுவனங்களை மூடி விட்டீர்கள். விரைவில் கிரேட் ஈஸ்ட்ரன் ஓட்டலையும் விற்க முடிவு செய்துள்ளீர்களே...?**

உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. எல்லாக் கட்சிகளும் தம்மைத்தாமே சுயபரிசீலனை செய்து வருகின்றன. தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டு வருகின்றன. இதுபோலவே சி.பி.எம். கட்சியும் தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டு வருகிறது. அனைத்து அன்னிய நிறுவனங்களையும் அவற்றின் முதலீடுகளையும் கைப்பற்றித் தேசவுடைமையாக்க வேண்டும் என்பது முன்பு எமது கொள்கையாக இருந்தது. இப்போது நாங்கள் எங்கள் கொள்கையைத் தலைகீழாக 180 டிகிரிக்கு மாற்றி விட்டோம்.

மன்மோகன் சிங் தாராளமயமாக்கலின் சிற்பி ஆவார். நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ள அரசுத் துறை நிறுவனங்களில் இலாபமீட்டும் நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதையே நாங்கள் எதிர்க்கிறோம். ஒட்டு மொத்தமாக தனியார்மயத்தை நாங்கள் எதிர்ப்பதில்லை. நாங்கள் நேருவின் கூட்டுப் பொருளாதாரக் கொள்கையை இப்போதும் ஆதரிக்கிறோம். முன்பு, தனியாரிடமிருந்த நிறுவனங்களை நாங்கள் அரசுத்துறை நிறுவனங்களாக்கினோம். இப்போது, மே. வங்கத்தில் 56 அரசுத்துறை நிறுவனங்கள் உள்ளன. இப்போது நாங்கள், எல்லா தனியார் நிறுவனங்களையும் அரசுடைமையாக்கியது தவறு என்று உறுதியாக நம்புகிறோம். இந்த அரசுத்துறை நிறுவனங்களை இப்போது நாங்கள் மறு ஒழுங்கமைப்பு செய்ய முயற்சித்து வருகிறோம். ஏற்கெனவே இரண்டு அரசுத்துறை நிறுவனங்களை மூடிவிட்டோம். 16-17 நிறுவனங்களை அரசும் தனியாரும் கூட்டுச் சேர்ந்து பங்கேற்கும் கூட்டுப் பங்கு நிறுவனங்களாக மாற்றியமைக்க முயற்சித்து வருகிறோம். மற்றவற்றை ஓராண்டுக்குள் மறுசீரமைக்க முயற்சிப்போம்.

**• கிரேட் ஈஸ்ட்ரன் ஓட்டல் விவகாரம் என்னவாயிற்று?**

ஒரு மாதம் பொறுத்திருங்கள். சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் அரசின் முடிவை (தனியார்மயமாக்குவதை) ஏற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையேல், அவை கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று நான் எச்சரித்துள்ளேன்.


**• நடந்து முடிந்த சி.பி.எம். மாநாட்டில் உற்பத்தியைப் பெருக்க உதவுகின்ற, தொழில்நுட்பத்தை மேம்படுத்தக் கூடிய, வேலை வாய்ப்பை உருவாக்கக் கூடிய அன்னிய முதலீடுகளை வரவேற்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளீர்கள். அன்னிய முதலீடுகள் வெள்ளமெனப் பாய்வதற்கு இந்த நிபந்தனைகள் உதவியாக இருக்குமா?**

யதார்த்தமான அரசியலில் வறட்டுவாதத்துக்கு இடமே இல்லை. அண்மைக் காலமாக நாங்கள் பெருமளவு மாறியுள்ளோம். எங்கள் கொள்கைகளையும் திட்டங்களையும் மாற்றிக் கொண்டுள்ளோம். கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் மே.வங்கத்தின் முன்னேற்றத்துக்குப் பேருதவியாக இருக்கும் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்.

**• கடந்த நாலரை ஆண்டுகளில் மே.வங்கத்தை முதலாளிகளின் நம்பகமான நட்பு மாநிலமாக மாற்றியதில் உங்கள் பங்கு மகத்தானது என்று இந்தியாவின் பெருந் தொழில் நிறுவனங்கள் உங்களைப் பாராட்டியுள்ளனவே! முதலீடுகள் வெள்ளமெனப் பாய்வதில் நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்களா?**

1960-70களிலும் அதன் பின்னரும் எமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் நாங்கள் மிகக் கடுமையான தவறுகளைச் செய்துவிட்டோம். ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் "கெரோ" (முற்றுகைப் போராட்டம்) என்ற சொல் இடம் பெற்றதற்கு, அப்போது பரவலாக தொழிலாளர்கள் இத்தகைய "கெரோ" போராட்டங்

தொடர்ச்சி 10-ஆம் பக்கம்



**"அனைத்து அன்னிய நிறுவனங்களையும் அவற்றின் முதலீடுகளையும் கைப்பற்றித் தேசவுடைமை யாக்க வேண்டும் என்பது முன்பு எமது கொள்கையாக இருந்தது. இப்போது நாங்கள் எங்கள் கொள்கையைத் தலைகீழாக 180 டிகிரிக்கு மாற்றி விட்டோம்."**

**- புத்ததேவ் பட்டாச்சார்யா**



படிப்பகம்

www.padippakam.com

## அனைத்திந்திய முசுலீம் தனிநபர் சட்டவாரியத்தின் மாதிரி திருமண ஒப்பந்தம்:

# புதிய மொந்தை பழைய கள்ளு

இசுலாமிய மகளிர் அமைப்புகள், முசுலீம் தனிநபர் சட்டத்தில் சீர்திருத்தங்களைக் கோரும் சில அறிவுஜீவிகள் ஆகியோார் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததற்கு இணங்க, அனைத்திந்திய முசுலீம் தனிநபர் சட்ட வாரியம், ''நிக்காஹ் நாமா'' என்றழைக்கப்படும் திருமண ஒப்பந்தமொன்றைப் புதிதாகத் தயாரித்து, கடந்த மே 1 அன்று வெளியிட்டு இருக்கிறது. திருமணத்தை நடத்தி வைக்கவும்; மணவிலக்கு உள்ளிட்டு கணவன் - மனைவி இடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும் இப்புதிய திருமண ஒப்பந்தத்தையே மாதிரியாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி, அவ்வாரியம் முசுலீம் மதத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரிவினரையும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

''தலாக், தலாக் எனத் தொடர்ச்சியாக மூன்று முறை சொல்லி முசுலீம் பெண்களை விவாகரத்து செய்யும் முத்தலாக் முறையை நிராகரிக்க வேண்டும்; முசுலீம் மதத்தில் நடக்கும் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்ய வேண்டும்; பலதார மணத்தைத் தடை செய்ய வேண்டும்; முசுலீம் பெண்களுக்கு விவகாரத்துக் கோரும் உரிமை அளிக்கப்பட வேண்டும்'' என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை, முசுலீம் மகளிர் அமைப்புகள் முசுலீம் தனிநபர் சட்ட வாரியத்திடம் கோரியிருந்தன. குரானில் பெண்களுக்கு என்னென்ன உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளதோ, அந்த உரிமைகள் தங்களுக்கு மீண்டும் அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் முசுலீம் மகளிர் அமைப்புகளின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால், முசுலீம் தனிநபர் சட்டவாரியம் தயாரித்துத் தந்துள்ள ''மாதிரி திருமண ஒப்பந்தமோ'' புதிய மொந்தை பழைய கள்ளு என்பது தவிர வேறில்லை. ''கணவனின் அனுமதியின்றி மனைவி, தனது பெற்றோர்களைக் கூடப் பார்க்கச் செல்லக் கூடாது'' என்ற விதியின் மூலம் மனைவியை கணவனின் கொத்தடிமையாக்குகிறது, இப்புதிய திருமண ஒப்பந்தம்.

முசுலீம் தனிநபர் சட்டத்தில் திருமணத்திற்கு ஏற்ற பருவ வயது 15 முதல் 18-க்குள் இருக்கலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது. ''இதில் இந்த ஊசலாட்டம் தேவையில்லை; திருமண பருவ வயதை 15 எனக் கறாராக வரையறுத்துவிடலாம்'' என முசுலீம் தனிநபர் சட்ட வாரியத்தில் மத குருமார்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அதே சமயம், 15 வயதிற்குக் கீழான சிறுமிகள், பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொடுக்கப்படுவதையும் இவ்வாரியம் தடை செய்யவில்லை.

முத்தலாக் விவகாரத்தைப் பொருத்தவரை, முசுலீம் தனிநபர் சட்ட வாரியம் பெண்களுக்கு மாபெரும் 'சலுகை'யொன்றை அளித்திருக்கிறது. இதன்படி, ''மனைவியை மணவிலக்கு செய்ய எண்ணும் கணவன், ''தலாக்'' என மூன்று முறை அடுத்தடுத்துத் தொடர்ச்சியாகச் சொல்லி விவாகரத்து செய்வது செல்லத்தக்கது . ஆகாது. இதற்கு மாறாக, புனிதமான குரான்படி ஒவ்வொரு ''தலாக்''கிற்கும் ஒரு மாத இடைவெளிவிட்டு, மூன்று முறை (தலாக்) சொல்லி, மனைவியை விவகாரத்து செய்துவிடலாம்'' என ஆலோசனை வழங்கியிருக்கிறது. இந்த ஆலோசனையையும் கூட, முசுலீம் மதத்தைச் சேர்ந்த ஆண்கள் கண்டிப்பாகக் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற கட்டாயமும் கிடையாது.

முசுலீம் தனிநபர் சட்டத்தின்படி ''கணவனை நான்கு ஆண்டுகளாகக் காணவில்லை; தன்னைப் பராமரிப்பதில்லை; ஆண்மையின்மை; மனநிலை பிறழ்வு; கொடுமைப்படுத்துதல்'' ஆகிய காரணங்களின் அடிப்படையில் முசுலீம் பெண், கணவனிடமிருந்து மணவிலக்குப் பெற முடியும். முசுலீம் மகளிர் அமைப்புகள் இவற்றுக்கும் மேலாக, முசுலீம் பெண்கள் தங்களின் சுய விருப்பத்தின் அடிப்படையில் மணவிலக்குப் பெறும் ''குல்-ஆ'' என்ற உரிமை அளிக்கப்பட வேண்டும் எனக் கோரியிருந்தன.

''உள்ளூர் காசி (மதத் தலைவர்) அனுமதியின்றி முசுலீம் பெண்கள் மணவிலக்குப் பெற முடியாது'' என நிபந்தனை விதித்து மகளிர் அமைப்புகளின் கோரிக்கையை உதறித் தள்ளிவிட்ட சட்ட வாரியம், ''பெண்கள் வேலைக்குப் போய் சம்பாதித்து, குடும்ப பாரத்தைச் சுமக்கிறார்களா என்ன, ஆண்களைப் போல உரிமைகளைக் கொடுப்பதற்கு?'' எனத் திமிரோடு கேட்டிருக்கிறது.

''இரண்டு குடும்பங்களைப் பராமரிக்கும் தகுதி ஒருவருக்கு இருக்கிறது'' என உள்ளூர் மதத் தலைவர் முடிவுக்கு வரும் பட்சத்தில், ஒரு முசுலீம் ஆண், முதல் மனைவி இருக்கும் பொழுதே இரண்டாம் திருமணம் செய்து கொள்ளத் தடையில்லை'' எனப் புதிய திருமண ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ''எனக்கு தெம்பு இருக்கு; நான் இன்னொருத்தியைக் கட்டிக்கிட்டேன்'' என ஆண்கள் திமிரோடு கொச்சையாகப் பேசுவதை, நாகரீகமாக மாற்றி விதியாக்கி விட்டது முசு

மாதிரி திருமண ஒப்பந்தம் வெளியிடப்பட்ட அனைத்திந்திய முசுலீம் தனிநபர் சட்ட வாரியத்தின் போபால் மாநாடு.






படிப்பகம்

www.padippakam.com

லீம் தனிநபர் சட்டவாரி யம்.

•••

இந்திய அரசு, முசுலீம் தனிநபர் சட்டத்தில் எந்தவிதமான சீர்திருத்தத்தையும் கொண்டு வந்து விடாமல் கண்காணிப்பதற்காக முசுலீம் மதப் பழமைவாதிகளாலும், மதகுருமார்களாலும் 1970-களில் உருவாக்கப்பட்ட அமைப்புதான் அனைத்திந்திய முசுலீம் தனிநபர் சட்ட வாரியம். இவ்வமைப்பைச் சேர்ந்த 400 உறுப்பினர்களுள் ஒருவர் கூட முசுலீம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது கிடையாது. ஷாரியத் சட்டத்தைக் காப்பதுதான் இதன் தலையாய குறிக்கோள். நேரிடையாக அரசிடம் கோரிக்கை வைக்காமல், இப்படிப்பட்ட பிற்போக்குத்தனமான அமைப்பிடம் முசுலீம் மதச் சட்டத்தை திருத்தக் கோரிக்கை வைப்பதை, மூட நம்பிக்கை என்றுதான் சொல்ல முடியும்.



முசுலீம் பெண் உரிமை கூட்டமைப்பைச் சேர்ந்த முஸ்கான், மாதிரி திருமண ஒப்பந்தத்திற்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக, மும்பயில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அவ்வொப்பந்த நகலைப் பகிரங்கமாகக் கிழித்தெறிகிறார்.

பெரும்பாலான முசுலீம் பெண்கள் அமைப்புகளே இப்புதிய திருமண ஒப்பந்தத்தைக் காறி உமிழ்ந்த பிறகும், 'மார்க்சிஸ்டு' கட்சியை சேர்ந்த ஜனநாயக மாதர் சங்கம், ''எவ்வளவுதான் குறைபாடுகள் இருந்தாலும் கூட, இப்புதிய திருமண ஒப்பந்தம் ஒரு அடி முன்னே எடுத்து வைப்பதாகும்'' எனப் பாராட்டி இருக்கிறது. மதவெறி பிடித்த பா.ஜ.க.வை விட காங்கிரசு முற்போக்கானது; ''சாதா'' தாராளமயத்தைவிட, மனித முகம் கொண்ட தாராளமயம் நல்லது; இந்துத்துவாவை விட இந்துயிசம் உயர்வானது என்ற அக்கட்சியின் சந்தர்ப்பவாத அரசியல் அளவுகோல் தான், முசுலீம் தனிநபர் சட்ட வாரியம் 'முன்னோக்கி எடுத்து வைத்திருக்கும் அடியையும்' அளக்கப் பயன்பட்டிருக்கும் போலும்.

ஷரியத்தில் (முசுலீம் தனிநபர் சட்டத்தின்படி) நிவாரணம் கிடைக்காது என்பதை உணர்ந்து, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி நிவாரணம் கோரி ஆயிரக்கணக்கான விவாகரத்து செய்யப்பட்ட முசுலீம் பெண்கள் நீதி மன்றத்தை அணுகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு மனுவும் ஷரியத்தின் ஆணாதிக்கத்திற்கும் அநீதிக்கும் எதிரான பிரகடனங்கள்தான்.

இப்படிப்பட்ட நிலையில், குடும்பம், திருமணம், மணவிலக்கு, சொத்துரிமை, தத்தெடுத்தல் உள்ளிட்ட சிவில் வாழ்க்கையில் பிற்போக்கான மதச் சட்டங்கள் அதிகாரம் செலுத்துவதைத் தூக்கியெறிந்து விட்டு, அதனிடத்தில் மதச்சார்பற்ற சிவில் சட்டத்தை அமல்படுத்தக் கோருவதுதான் காலப் பொருத்தமாக இருக்க முடியும்.

ஆனால், 'மார்க்சிஸ்டு'களோ ''ஒவ்வொரு மதத்தின் தனிநபர் சட்டமும், ஜனநாயகம், சமூக நீதி, ஆண்-பெண் சமத்துவம் போன்ற நவீனக் கொள்கைகளுக்கு எதிராகப் பெண்களின் உரிமையில் எந்த அளவுக்குக் குறுக்கிடுகிறதோ, அந்த அளவுக்கு அந்தந்த மதத் தனிநபர் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்'' எனக் கோரி, மத அதிகாரத்திற்கு எதிரான போராட்டத்தை வெட்டிக் குறுக்கி விடுகிறார்கள். ''மதத் தனிநபர் சட்டங்களில் ஏற்படும் மாற்றங்களையே'' மதச் சார்பின்மையை நோக்கிய வளர்ச்சியாகப் பிதற்றுகிறது, சி.பி.எம்.

19-ஆம் நூற்றாண்டிலும், 20-ஆம் நூற்றாண்டிலும் நடைபெற்றுள்ள சமூகப் புரட்சிகளும், மாற்றங்களும் பெண்களுக்குப் பல ஜனநாயக சிவில் உரிமைகளை வழங்கியிருக்கின்றன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு போராடுவதற்குப் பதிலாக, முசுலீம் பெண்கள் அமைப்புகளும், சீர்திருத்தவாதிகளும், ''ஒருதார மண முறைக்கு ஆதரவாகவும், முத்தலாக்கிற்கு எதிராகவும் பல ஆதாரங்களை குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் வழங்கிய தீர்ப்புகளில் இருந்து எடுத்துக் காட்டி, அதற்கு ஏற்ப முசுலீம் தனிநபர் சட்டத்தைச் சீர்திருத்த வேண்டும்'' எனக் கோருகிறார்கள்.

அதே நூல்களில் இருந்து வேறு ஆதாரங்களைக் காட்டியோ, அல்லது ஒரு சொல்லுக்கு வேறு விதமாகப் பொருள் கூறியோ இவர்களுக்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள் இசுலாமியப் பழமைவாதிகள். தொடர்ந்து இவர்களுக்கு இடையே நடக்கின்ற அடுத்தடுத்த சுற்று விவாதங்கள், மத நூல்களின் பொருள் ஆய்வாக வீழ்ச்சி அடைகின்றனவேயன்றி, பிரச்சினை குறித்த அறிவுபூர்வமான விவாதமாக வளர்ச்சி அடைவதில்லை.

நவீன யுகத்தின் தேவைகளுக்கு 1000 ஆண்டுக்கு முற்பட்ட குர்ஆனில் இருந்து மேற்கோள் காட்டுவது, முசுலீம் மதத்திற்கு முற்போக்கு முலாம் பூசுவதற்குப் பயன்படுமேயொழிய, முசுலீம் பெண்களின் சிவில் உரிமை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படவில்லை. இன்று சர்வாதிகார நிறுவனங்களாக மாறிவிட்ட மதத்தை, அதன் தோற்ற காலத்தில் சொல்லப்பட்ட நல்ல விசயத்தைக் காட்டி திருத்த முயலுவது நடைமுறையில் கேலிக் கூத்தாகவே முடியும்.

பாகிஸ்தான் உள்ளிட்டு, இசுலாமிய நாடுகளாகத் தங்களை அறிவித்துக் கொண்டுள்ள பல்வேறு நாடுகளில், தலாக் சட்டம் ஷரியத்தின் படி பின்பற்றப்படுவதில்லை. அந்நாடுகளில் ஷரியத்தில் பல சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இது, ''இசுலாமிய நாடுகளிலேயே ஷரியத் சட்டம் திருத்தப்படும் பொழுது, 'மதச்சார்பற்ற' இந்தியாவில் காலாவதியாகிப் போன அச்சட்டத்தை இன்றும் ஏன் தூக்கிப் போடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்?'' என்ற கேள்வியை எழுப்புவதற்



படிப்பகம்

www.padippakam.com

கான அடிப்படையைக் கொடுத்த பின்னும், முசுலீம் பெண்கள் அமைப்புகள் இந்தக் கேள்வியை எழுப்ப மறுக்கின்றன. மாறாக, அந்நாடுகளைப் போல இந்தியாவிலும் சீர்திருத்தம் வேண்டும் என்றுதான் கோருகின்றன.

சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முற்போக்கான சக்திகளின் போராட்டங்கள் ஆகியவற்றின் தாக்குதலால் நிலைகுலைந்து வரும் மதம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் மதச்சார்பற்ற முற்போக்கு சக்திகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் சீர்திருத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்கிறது.

இசுலாமியக் குடியரசான பாகிஸ்தானில் முத்தலாக் மணவிலக்கு முறை தடை செய்யப்பட்டிருக்கிறதென்றால், அது முசுலீம் பெண்களின் உரிமை பற்றிய அக்கறையைக் காட்டவில்லை. மாறாக, மதச்சார்பற்ற அரசாக மாறிவிடாமல் தடுப்பதற்கு அவர்கள் கொண்டிருக்கும் எச்சரிக்கை உணர்வைத்தான் காட்டுகிறது.

இசுலாமிய மக்கள் மீதான தாக்குதலும், மதக் கலவரங்களும் மிகுந்துள்ள சூழலில் தனது சமூகம் என்ற அடிப்படையில் இசுலாமியச் சமூகத்துடன் அப்பெண்கள் தம்மை நெருக்கமாக இணைத்துக் கொள்வதும், மதப் பழமைவாதிகளுடன் சமரசம் செய்து கொள்வதும் வியப்புக்குரிய விசயங்கள் அல்ல; ஆனால், இதைக் காட்டியே, ''மதச் சார்பற்ற சிவில் சட்டத்தை இசுலாமிய பெண்களே ஆதரிக்க மாட்டார்கள்'' எனச் சீர்திருத்தவாதிகள் பயமுறுத்துகிறார்கள்.

இவர்களின் இந்த வாதத்தைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், ''சிறுபான்மை மதத்தினர் இந்து மத வெறி பாசிசத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்றால், சிறுபான்மை மதத்தில் நிலவும் ஆணாதிக்கத்தை எதிர்க்கக் கூடாது'' என்பதுதான்.

சிவில் வாழ்க்கை மீது மதம் செலுத்தும் அதிகாரத்தைப் பிடுங்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறியபோது, மதப் பகைமைகளை மறந்து இந்து சனாதனிகளும், இசுலாமியப் பழமைவாதிகளும் அம்பேத்கருக்கு எதிராக ஒன்று திரண்டதை இங்கு நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.

மதப் பழமைவாதிகளோடு அனுசரணையாக நடந்து கொள்ளாமல், மதச் சார்பற்ற சனநாயக சக்திகளோடு இணைந்து போராடும் பொழுது மட்டுமே, முசுலீம் பெண்கள், தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள மத அதிகாரத்தையும், ஆணாதிக்கத்தையும் வீழ்த்த முடியும் என்பதுதான் இந்த வரலாற்று உண்மையில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

மேலும், அரசு விவகாரங்களில் இருந்தும், அரசியலில் இருந்தும் மதத்தை அறுத்து எறிகின்ற மதச் சார்பின்மைக்காகவும், அதன் அடிப்படையிலான சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான போராட்டமும்தான் முசுலீம்களுக்கு, குறிப்பாக முசுலீம் பெண்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்ற இந்து மதவெறி பாசிசத்தையும் வீழ்த்தும்!

**● செல்வம்**

---

**7-ஆம் பக்கத் தொடர்ச்சி**

களை நடத்தியதே காரணமாகும். இப்போது நாங்கள் எங்கள் தொழிற்சங்கங்களை பழைய தவறுகள் (கெரோ போராட்டம்) தொடராமல் செயல்படுமாறு கோரியுள்ளோம்.

ஒரு ஆலையின் இலாபத்துக்கும் நட்டத்துக்கும் ஆலை நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் சரிசமமாகப் பொறுப்பேற்க வேண்டும். நமது ஆலைகளில் நாம் உற்பத்தியைப் பெருக்காவிட்டால், உலகளாவிய ரீதியில் நாம் போட்டி போட்டு முன்னேறவே முடியாது. போட்டி போட்டு முன்னேறாவிடில், எந்தவொரு ஆலையும் நீடித்திருக்கவே முடியாது.



**ஐ.ஆர்.சிபுத்ரா என்ற இந்தோனேஷிய நிறுவன அதிபருடன் புத்ததேவ் பட்டாச்சார்யா.**

நாங்கள் ''கெரோ'' போராட்டத்தையோ, முரட்டுத்தனமான - அழிவேற்படுத்தும் போராட்டங்களையோ ஒருபோதும் அனுமதிப்பதில்லை. இதன் விளைவாக, மே.வங்கத்தைப் பற்றிய எதிர்மறையான சித்திரம் இப்போது மறைந்துவிட்டது. முகேஷ் அம்பானி (ரிலையன்ஸ் நிறுவனத்தின் அதிபர்), முன்னேறிய தகவல் தொழில் நுட்பக் கழகத்தை எமது மாநிலத்தில் தொடங்கப் பேராா்வம் காட்டி வருவதே இதற்குச் சான்று கூறப் போதுமானது. எஃகு ஆலை, சுட்ட நிலக்கரி தயாரிப்பு ஆலை, மோட்டார் வாகன ஆலை, புற்றுநோய் மருத்துவக் கழகம் ஆகியவற்றை எமது மாநிலத்தில் தொடங்க ரத்தன் டாடா முன்வந்துள்ளார். ஜிண்டால் நிறுவனம், எமது மாநிலத்தில் புதிய எஃகு ஆலை தொடங்கவுள்ளது. மிட்சுபிஷி, ஐ.பி.எம்; பெப்சி ஆகிய அன்னிய நிறுவனங்கள் ஏற்கெனவே எமது மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இருப்பினும், எமது மாநிலத்தின் அன்னிய நேரடி முதலீட்டின் அளவு ஆண்டுக்கு ரூ. 2,300 கோடியாக இருப்பது எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது. இதுபோல் இன்னும் இரண்டு மடங்கு அளவுக்கு அன்னிய நேரடி முதலீடுகள் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

**● இவ்வாறு அன்னிய முதலீடுகள் பெருகிவரும் போக்கை நீங்கள் நீடித்து நிலைபெறச் செய்வீர்களா?**

நிச்சயமாக. மே. வங்கத்தின் தொழிற்துறை மறுமலர்ச்சியை உலகில் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்தவே முடியாது.

**● எந்தெந்த பெருமுதலாளிகள் உண்மையில் நாட்டு நலனில் அக்கறை கொண்டு செயல்படுகிறார்கள்?**

ரத்தன் டாடாவும் அசிம் பிரேம்ஜியும் (விப்ரோ நிறுவனத்தின் அதிபர்) உயர்ந்த நாட்டுப்பற்றாளர்கள்.

**பின்இணைப்பு:**

சி.பி.எம். மாநாட்டில், சமூகசேவையில் ஈடுபடும் தன்னார்வக் குழுக்கள் - மகளிர் சுயஉதவிக் குழுக்களுடன் இணைந்து செயல்பட்டு 'புரட்சி' செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு முன்னரே, மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் துணைவியாரான மீரா, அரசியலுக்கு அப்பாற்பட்ட 'சமூக சேவை'யில் ஈடுபட்டு வருகிறார். அவரது மகளான சுசிதனா, சுற்றுச்சூழல் - வனவிலங்கு பாதுகாப்புக்கான தன்னார்வக் குழுவை நிறுவி 'சமூக சேவை' செய்து வருகிறார். மே. வங்க முதல்வரின் குடும்பத்திலிருந்தே 'புரட்சி' தொடங்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுகிறது!

●



படிப்பகம்

www.padippakam.com

# நாம் வாழ்வது கணினி யுகத்திலா? கற்காலத்திலா?

“குழந்தைத் திருமணம் பிற்போக்குத்தனமான மூடப்பழக்கம்; அது, குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையைக் காவு கொடுப்பதற்கு ஒப்பானது; சட்டப்படி தவறானது'' எனக் கிராம மக்களிடையே, குறிப்பாக பெண்களிடையே விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்ததற்காக, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சகுந்தலா வர்மா என்ற பெண் அதிகாரி மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அவரைக் கொலை செய்துவிடும் முடிவோடு நடத்தப்பட்ட இத்தாக்குதலில், அவரின் இரு கைகளும் துண்டாகித் தனியாக விழுந்துவிட்டன. அவரது கூந்தல் அறுக்கப்பட்டு, அவர் கோரப்படுத்தப் பட்டுள்ளார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவரின் கைகள், அறுவை சிகிச்சைக்குப் பின் இணைக்கப்பட்டுவிட்டன; எனினும், அவர் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பின் கீழ்தான் இருந்து வருகிறார். குழந்தை திருமணத்திற்கு எதிராக யாராவது வாயைத் திறந்தால் அவர்களுக்கு இந்தக் கதிதான் ஏற்படும் என எச்சரிக்கும் விதமாக இத்தாக்குதல் பிற்போக்கு கும்பலால் நடத்தப்பட்டுள்ளது.



அக்ஷய திருதியை நாளில் நடந்த குழந்தை திருமணங்களுள் ஒன்று.

தமிழகத்து நடுத்தர வர்க்கம் நகைக்கடைகளை நோக்கி ஓடும் ''அக்ஷய திருதியை'' நாளை, குழந்தை திருமணங்களை நடத்துவதற்கு ஏற்ற முகூர்த்த நாளாக, மத்தியப் பிரதேசத்திலும், ராசஸ்தானிலும் கொண்டாடுகிறார்கள். கடந்த மே 11 ஆம் தேதி வந்த அக்ஷய திருதியை நாளில் மட்டும் ஏறத்தாழ 10,000 குழந்தைத் திருமணங்கள் நடந்திருக்கக் கூடும் என அரசாங்கமே ஒத்துக் கொள்கிறது. இதற்கு முதல் நாள் (மே 10) இரவில்தான் சகுந்தலா வர்மா பிற்போக்கு கும்பலால் தாக்கப்பட்டார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சகுந்தலா வர்மா.



உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் சகுந்தலா வர்மாவிற்கு ஆறுதல் சொன்ன ம.பி. மாநில பா.ஜ.க முதல்வர் பாபுலால் கௌரின் அதே வாய், இன்னொரு புறம், ''குழந்தைத் திருமணத்தைத் தடுக்க வாய்ப்பில்லை'' என வக்காலத்து வாங்கியிருக்கிறது. குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள துறையின் அமைச்சர் அர்ச்சனா சிட்னிஸ், ''இந்தத் தாக்குதலுக்கு முன் விரோதம்தான் காரணம்'' எனக் கூறி, சகுந்தலா வர்மாவைத் தாக்கிய பிற்போக்குக் கும்பலைக் காப்பாற்றவிட முயலுகிறார். பார்ப்பன பிற்போக்குத்தனங்களை காப்பதற்காகவே அவதாரமெடுத்துள்ள பா.ஜ.க. கும்பலிடம், இதைத் தவிர வேறெதை எதிர்பார்க்க முடியும்?

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ராசஸ்தானைச் சேர்ந்த பன்வாரி தேவி என்பவர், குழந்தைத் திருமணத்தைத் தடுத்ததற்காக, மேல்சாதி வெறியர்களால் பாலியல் பலாத்காரப்படுத்தப் பட்டார். அவ்வழக்கை விசாரித்த குற்றவியல் நீதிமன்றம், ''கீழ்சாதிப் பெண்ணான பன்வாரி தேவியை உயர் சாதிக்காரர்கள் கற்பழித்திருக்க முடியாது'' எனத் தீர்ப்புக் கூறி, குற்றவாளிகளை விடுதலை செய்துவிட்டது. நீதிமன்றமே குழந்தைத் திருமணத்திற்கு ஆதரவாகச் செயல்படும் பொழுது, ''இப்போது இருப்பதைவிடக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தால் குழந்தைத் திருமணத்தை ஒழித்து விடலாம்'' என நமது காதில் பூ சுற்றுகிறது, காங்கிரசு.

2020-இல் இந்தியா வல்லரசாகப் போவதாக ஆளுங்கும்பல் பீற்றிக் கொண்டு திரிகிறது. ஆனால், இந்தியா கற்காலத்தைக் கூட இன்னும் தாண்டவில்லை என்பதற்கு மே 11-இல் நடந்த 10,000 குழந்தைத் திருமணங்களே சாட்சி.

குழந்தைத் திருமணம், சதி போன்ற பிற்போக்குத்தனங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றால், முதலில் பார்ப்பனிய பண்பாட்டு மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடி ஒழித்துக் கட்ட வேண்டும். அதற்குத் தேவை தகவல் தொழில் புரட்சியல்ல. மாறாக, நக்சல்பாரிகளின் புதிய ஜனநாயகப் புரட்சி!

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

### காஞ்சிபுரம் – கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல்கள்:

# பணநாயகத்தின் வெற்றி!

கும்மிடிப்பூண்டி மற்றும் காஞ்சிபுரம் இடைத் தேர்தல்களில் அ.தி.மு.க. பெற்ற அமோக வெற்றி, அக்கட்சியினரையே ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது!

இவ்விரு தொகுதிகளிலும் முன்னெப்போதையும்விட அதிகமான அளவு ஓட்டுப்பதிவு நடந்துள்ளதோடு, அ.தி.மு.க. பெரும் வாக்கு வித்தியாசத்திலும் வெற்றி பெற்றுள்ளது.

இடைத்தேர்தல் முடிவு குறித்து கருத்து தெரிவித்த கருணாநிதி "தேர்தல் விதிகளை மீறி, ஆணையத்தின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு அரசாங்கப் பணத்தையே செலவிட்டு இரு தொகுதிகளிலும் வசதிகள் செய்திட சில கோடி ரூபாய்களைச் செலவழித்தும் போதாமல், அடிப்பது போல் அடி, (தேர்தல் ஆணையம்) நாங்கள் அழுவது போல் அழுது எங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறோம் என்ற சூழ்ச்சியில் ஈடுபட்டும் அ.தி.மு.க. இந்த வெற்றியைப் பெறமுடிந்தது" என்றார்.

பா.ம.க. தலைவர் இராமதாசு, "பணநாயகம் தற்காலிகமாக ஜெயித்திருக்கிறது" என்றார்.

"நாங்க பிரியாணிக்கு காசு தந்தோம்! தி.மு.க. பீடாவுக்கு காசு தந்தது!" என்று தங்கள் வெற்றியின் ரகசியத்தை மனம் திறந்து சொல்கின்றனர், அ.தி.மு.க.வினர்.

காஞ்சிபுரம் தொகுதிக்கு பொன்னையன் தலைமையில் 12 மந்திரிகள். கும்மிடிப்பூண்டிக்கு ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் 12 மந்திரிகள். 3 வார்டுக்கு ஒரு மந்திரி; ஒரு தெருவுக்கு ஒரு எம்.எல்.ஏ.; இவர்களுக்கும் கீழே மாவட்ட, ஒன்றிய, இணைச் செயலர்கள் என்று துரத்திவிட்டு, அவர்களுக்குப் பின்னால் போலீசு, அரசு எந்திரத்தை தொடர் வண்டி போல் அனுப்பி வைத்து, இந்த மொத்த கும்பலையும் உளவுத்துறை போலீசு மூலம் கண்காணித்து, பணத்தை இறைத்து வெற்றியைப் பறித்தார், பாசிச ஜெயலலிதா.

"500 ரூபாய் வாங்கியும் கூட (வாக்காளர்கள்) ஓட்டுப் போட வராமல் இருந்தாலும் நாங்க கோவிச்சுக்கலை. 1000 ரூபாயை கையில திணிச்சி இலைக்கு போடச் சொன்னோம்... 20 கோடிகளைக் கொட்டி இரண்டு தொகுதிகளை வங்கினோம்" என்று சந்தை பத்திரிகைகளில் சர்வ சாதாரணமாகச் சொல்கின்றனர், அ.தி.மு.க.வினர்.

"தலைமைக் கழகம் (அ.தி.மு.க.) தந்தது மூன்று கோடியாம்; பன்னிரண்டு அமைச்சர்களும் தலைக்கு செலவு செய்தது ஐம்பது லட்சமாம்" என்று அ.தி.மு.க. இறைத்த பணத்திற்கு கணக்கு சொல்கின்றன, 'புலனாய்வு' பத்திரிக்கைகள்.

இதற்கு மத்தியில், 'அறுக்க மாட்டாதவனுக்கு இடுப்ப சுத்தி ஆயிரதெட்டு அருவா!' என்பதுபோல், தேர்தல் ஆணையம் தேர்தல் களத்தில் சுழன்றடித்து வித்தைக் காட்டியது. "தேர்தல் விதிமுறைகளை மீறியதாக அரசியல் கட்சிகளின் 25 வாகனங்கள் பறிமுதல்! கதிகலங்க வைக்கிறார், தேர்தல் கமிஷன் சிறப்பு பார்வையாளர், கே.ஜே.ராவ்", "கலவரம் வன்முறையில் ஈடுபடுபவர்களைக் கண்டதும் சுட உத்தரவு; வெளி மாவட்டத் தொண்டர்கள் வெளியேற்றம்", "அரசியல் கட்சியினரைத் தங்க வைக்கும் லாட்ஜ், ஓட்டல் அங்கீகாரம் ரத்து!", "தேர்தல் கமிசனின் கெடுபிடியான நடவடிக்கைகள் காரணமாக எங்குமே, யாரும் கள்ள ஓட்டுப் போட முடியவில்லை", "10,000-க்கும் மேற்பட்ட தமிழக போலீசு மற்றும் 8 கம்பெனி துணை இராணுவம் - வாக்கு சாவடிகளுக்கு முழுப் பாதுகாப்பு" என்று பத்திரிக்கைகள் தேர்தல் கமிசனை ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நெருப்பு வளையமாகச் சித்தரித்தன. கருணாநிதி தலைமையிலான எதிரணியினர் அதற்கும் மேலே ஒரு படி சென்று, 'தேர்தல் கமிசன் என்ற நெருப்பு வளையத்தில் அ.தி.மு.க. பொசுங்கப் போவது நிச்சயம்' என்று பூரிப்படைந்தனர்.

இடைத் தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது, ஒரு பச்சிளம் குழந்தையின் கையில் நூறு ரூபாய் நோட்டைத் திணிக்கும் ஜெயா: பாசமா? இலஞ்சமா?



தேர்தல் களத்தில் வெற்றிக்கு பொறுப்பேற்ற கருணாநிதி மகன் ஸ்டாலினும் பேரன் தயாநிதி மாறனும் மத்திய தேர்தல் கமிசனுக்கு சாமரம் வீசினர். "மத்திய தேர்தல் கமிசன் காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தலை அமைதியாக நடத்த அனைத்து நடவடிக்கையும் எடுத்து வருகிறது. வாக்காளர்



படிப்பகம்

www.padippakam.com

கள் அச்சமின்றி வாக்குச் சாவடிகளுக்குச் சென்று உதய சூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்'' என்றனர்.

ஆக, ஜனநாயகம் என்ற புதையலைப் பாதுகாக்கப் படமெடுத்து ஆடும் பாம்பாக தேர்தல் கமிசனை வழிபட்டனர். ஜெயலலிதா என்ற ஜனநாயக விரோதி, அதனிடம் கடிபடுவது உறுதி என்று மலைபோல் நம்பியிருந்தது, தி.மு.க.

ஆனால், விளைவு எதிர்மறையாகிப் போனது! ''கள்ள ஓட்டு, வாக்குச்சாவடியைக் கைப்பற்றியது போன்ற குற்றங்கள், குளறுபடிகள் இல்லை'' என்ற பாராட்டுப் பத்திரமும், அமோக வெற்றியும் ஜெயலலிதா மீது பூவாகப் பொழிந்தது.

'வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுவது, கள்ள ஓட்டு போடுவது, துப்பாக்கி சூடு நடத்துவது' என்று 'பீகார் மாடல்' புராதன பாணி வன்முறைகளில் ஜெயலலிதா இறங்கவில்லை. மாறாக, 'கார்ப்பரேட்' நிறுவனங்களின் பங்கு முதலீட்டாளர்களின் கூட்டம் போல் சட்டமன்ற இடைத் தேர்தலை நடத்தினார். எதிரணியினரை உளவு நிறுவனங்கள் மூலம் மோப்பம் பிடித்து நுணுக்கமான திட்ட அடிப்படையில் எதிரிப்படைகளுக்குள்ளேயே காய்களை நகர்த்தினார். பணத்தால் அடிப்பது, எதையும் விலைக்கு வாங்குவது, எதிரியின் நிழலுக்கும் எலும்புத் துண்டை வீசியெறிவது என்று சில வாக்குச்சாவடிகளை அல்ல, இரண்டு தொகுதிகளையே தேர்தல் கமிசன் முன்னிலையில் அசாதாரண விலையில் பகிரங்கமாக ஏலம் எடுத்தார்.

எதிரணியினரின் கடைசி தலைவர் வரை விலை பேசியது, அ.தி.மு.க. இந்த பகிரங்க ஏலத்தின் எதிரொலி தேர்தல் முழுக்க வியாபித்தது. விளைவு; ''கும்மிடிப்பூண்டியில் பல இடங்களில் தி.மு.க. தரப்பில் பூத் ஸ்லிப் கொடுக்கக் கூட ஆள் இல்லை'' என்று பச்சையாக எழுதின, பத்திரிக்கைகள்.

'ஏழு கட்சிகள் கூட்டணியில் கண்ணை மூடிக் கொண்டு ஜெயித்து விடுவோம்' என்று இறுமாப்பில் இருந்த தி.மு.க. இரண்டு தொகுதிகளிலும் தோற்றதற்கு இன்னுமொரு காரணம், ''கறுப்பு ஆடுகள்'' என்கிறார்கள். ''எங்கள் கட்சியின் கிளைச்செயலாளர்கள் எத்தனை பேருக்கு அவர்கள் (அ.தி.மு.க.) பணம் கொடுத்தார்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்'' என்று வாக்குமூலம் அளித்தது, தி.மு.க. பா.ம.க. அணிகளிடமும் இதே



ஓட்டுக் கட்சிகளின் கொடி, தோரணங்களைக் கூட விட்டு விடாமல் துருவித் துருவிப் பார்த்த தேர்தல் கமிசன் அதிகாரி ராவிற்கு (வலது ஓரம்), இடைத் தேர்தலில் பணம் புகுந்து விளையாடியது மட்டும் கண்ணில் படவில்லையா?

தந்திரத்தைத்தான் பின்பற்றியது அ.தி.மு.க.

ஜெயா பணத்தை வாரியிறைத்து, இரண்டு தொகுதிகளைக் கைப்பற்றி விட்டார் என எதிர்க்கட்சிகள் ஒருபுறம் குற்றஞ்சுமத்திக் கொண்டிருக்க, மறுபுறமோ ஜெயலலிதா பெற்ற இவ்வெற்றிக்கு அறிவியல்பூர்வமான விளக்கம் கொடுத்து ஜெயலலிதாவை எப்படியாவது மக்கள் தலைவராக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன, 'முற்போக்கு', பிற்போக்கு பார்ப்பனப் பத்திரிக்கைகள் மற்றும் 'நடுநிலை' தகவல் ஊடகங்கள்.

''இது 'இடைத்'தேர்தல் இல்லே. 'எடைத்' தேர்தல்!'' (18.05.05 துக்ளக்) என்று தெருக் கழுதைகளும் கருத்துச் சொல்வதாக கருத்துப்படம் வரைந்த சோ, அதற்கடுத்த 'துக்ளக்' ஏட்டில் பல்டி அடித்தார். ''இந்த போட்டியில் ஆளும் கட்சி பெற்றுள்ள வெற்றி, ஜெயலலிதாவின் வெற்றி... அவருடைய தன்னம்பிக்கைக்குக் கிடைத்த வெற்றி'' (25.5.05 துக்ளக்) என்றார். தன்னுடைய அறிவு, கழுதையின் அறிவு அளவுக்குத் தெளிவானது அல்ல என்று நிரூபித்தார்.

''இந்து'' ஏட்டில், அதன் ஆசிரியர் ராம் ''இடைத்தேர்தல்களில் அ.தி.மு.க. பெற்ற உறுதியான வெற்றி, அது தனது மக்கள் விரோத கொள்கைகளைத் திரும்பப் பெற்றதற்குக் கிடைத்த பரிசு'' என்கிறார்.

ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர் போன்ற கிசுகிசு 'புலனாய்வு' பத்திரிக்கைகள், இரண்டு இடைத்தேர்தல்களிலும் ஜெயலலிதா தனது அ.தி.மு.க. கட்சியை விஞ்ஞானப்பூர்வமாக இயக்கித் திட்டமிட்டு வெற்றிப் பெற்றதாகப் புகழ்கின்றன.

தமிழகத்தையே திகைக்க வைத்த அ.தி.மு.க.வின் வெற்றிக்கு, ''ஜெயா வீசியெறிந்த பணம் காரணமா? இல்லை, ஜெயலலிதா தனது மக்கள் விரோதக் கொள்கைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டதால், மக்கள் மன்னித்து விட்டார்களா?'' என்ற பட்டிமன்றத் தலைப்பு கிடைத்திருப்பதுதான் இந்தத் தேர்தலினால் கிடைத்திருக்கும் ஒரே பலன்.

முதலாளித்துவப் பத்திரிக்கைகள் சொல்வது போல, ''மக்கள் ஜெயாவை மன்னித்து விட்டார்கள்'' என எடுத்துக் கொண்டால், அதைவிட ஏமாளித்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது; ''வாக்காளர்களை ஜெயா விலை பேசிவிட்டார்'' என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதை எடுத்துக் கொண்டால், அதைவிட இந்திய ஜனநாயகத்திற்கு வேறெதுவும் அசிங்கம் இருக்க முடியாது.

• குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

# நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!

# – புரட்சிகர அமைப்புகளின் மே தின போராட்ட அறைகூவல்

'நாட்டை மீண்டும் காலனியாக் காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!", "மேலாதிக்க வெறிபிடித்த அமெரிக்காவின் கொலைவெறி, ஆட்சிக் கவிழ்ப்பு சதிகளை முறியடிப்போம்!", "இந்திய அரசே! நேபாளத்தின் பிற்போக்கு மன்னராட்சிக்கு ஆயுதம் வழங்காதே! நேபாளத்தில் புதிய ஜனநாயக அரசமைக்கப் போராடும் கம்யூனிசப் போராளிகளை வேட்டையாடும் அமெரிக்காவின் சதிக்குத் துணை போகாதே!" என முழக்கமிட்ட மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி மற்றும் விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பேரணி, பொதுக் கூட்டங்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் மூலம் அமெரிக்க மேலாதிக்கத்தையும், நாடு மறுகாலனியாவதையும் எதிர்த்த அரசியல் ஆர்ப்பாட்ட தினமாக மே தினத்தை மாற்றின.

'உலக வர்த்தகக் கழகத்தின் ஆணைப்படி ஏரி, குளம், ஆறுகளை பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கும் தண்ணீர் தனியார்மயத் திட்டம்; சில்லறை வியாபாரம் முதல் குப்பை அகற்றுதல் வரை அனைத்தையும் அந்நிய முதலாளிகளின் கொள்ளைக்குத் திறந்துவிடுதல்; வெள்ளையனின் நேரடிக் காலனியாதிக்கத்தைவிடக் கபடமானது, கொடியது தனியார்மயம் என்ற பெயரில் நடக்கும் இம்மறுகாலனியாதிக்கத்தின் கோரத் தாண்டவம்! பாராளுமன்றமும் சட்டமன்றமும் பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைக்கு உரிமம் வழங்கும் கருவிகள்! நடப்பது உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் ஆட்சி! தனியார்மய, உலகமயச் சுருக்கு இறுகுகிறது! விழித்துக் கொள்வோம்! புதிய ஜனநாயக அரசமைக்க நக்சல்பாரிப் பாதையில் அணிதிரள்வோம்!' என்று புரட்சிகர அமைப்பினர் மக்களை அறைகூவி அழைத்தனர்.

## சென்னையில்...

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி சார்பில் மே நாள் பேரணி, பொதுக்கூட்டம் சென்னை-ஆலந்தூர் பகுதியில் நடைபெற்றது. பு.ஜ.தொ.மு. மாநில பொதுச் செயலர் தோழர் சுப. தங்கராசு பேரணியைத் துவக்கி வைக்க, தொழிலாளர்கள், பெண்கள், குழந்தைகள் என்று சுமார் 400 பேர் முழக்க அட்டைகளையும், பதாகைகளையும் ஏந்தி, முரசு போல் முழக்கங்களை முழங்கிச் சென்றதைப் பொது மக்கள் பிரமிப்புடன் நின்று பார்த்தனர்.

பொதுக்கூட்டத்தில் பு.ஜ.தொ.மு. மாநிலப் பொருளாளர் பா.விஜயகுமார் சிறப்புரையாற்றினார். சிறுவர்களின் புரட்சிகர கலைநிகழ்ச்சிகளை பகுதி மக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர்.

## திருச்சியில்...

உறையூர் கடைவீதியில் 500-க்கும் மேற்பட்ட பொதுமக்களின் பங்கேற்புடன், மே நாள் பொதுக் கூட்டம் மற்றும் சிறுவர் கலைநிகழ்ச்சிகள் எழுச்சியுடன் நடந்தன.

தனியார் மருத்துவக் கொள்ளைக்காக, இனி அரசு மருத்துவமனைகளில் நாய்க் கடி மருந்துக்கும் நிதி ஒதுக்கீடு இல்லை என்பதை விளக்கி பெண் தோழர்கள் நடத்திய "நாய்க்கடி' நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றது. கூட்டத்தில் தோழர் குருசாமி மயில்வாகனன் சிறப்புரையாற்றினார்.

மே நாள் காலையில் திருச்சி-துவாக்குடியில் உள்ள அண்ணா வளைவு பகுதியில், "ஓட்டல் தொழிலாளர்கள் பாதுகாப்பு சங்கத்தின்" புதிய கிளை துவங்கப்பட்டது. கொடியேற்றி சங்கப் பலகையை திறந்து வைத்தார், ஓட்டல் தொழிலாளர் பாதுகாப்பு சங்க மாநிலத்தலைவர் தோழர் ப.பாரதிதாசன். கூட்டத்தில் பேசிய சங்க பொறுப்பாளர்கள், "தொழிலாளர்கள் சங்கமாய் ஒன்று சேரும் போதுதான் உரிமைகளை வென்றெடுக்க முடியும்" என்பதை வலியுறுத்தினார்கள்.

## தருமபுரியில்...

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களை மையப்படுத்தி தருமபுரியில் மே நாள் பேரணி, பொதுக்கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டது. அனுமதி வழங்காமல் வழக்கம் போல் இறுதி வரை இழுத்தடித்த போலீசார், சட்டம் - ஒழுங்கைக் காரணம் காட்டி மே நாள் அன்று அனுமதி மறுத்தனர்.

தடையை மீறி பெண்கள், குழந்தைகள் மற்றும் ஜனநாயக சக்திகள் உள்ளிட்டு 500 பேர் "தருமபுரி மாவட்டத்தில் போலீசு ஆட்சி ஒழிக!" என்று விண்ணதிரும் முழக்கங்களுடன் பேரணியாகச் சென்றனர்.

திடீரென அங்கு குவிந்த போலீசு, 40-க்கும் மேற்பட்ட தோழர்களைக் கைது செய்தது. ஊர்வலத்தினர் உறுதி குலையாமல், பெண்கள்-குழந்தைகள் உள்பட அனைவரும் போலீசின் அடக்குமுறையை எதிர்த்து முழக்கமிட்டனர்.

வழக்கமாக "நக்சலைட்டுகள்" என்று பீதியூட்டி அடக்குமுறைகளையும் அவதூறுகளையும் மேற்கொள்ளும் போலீசு அவமானகரமாக அம்பலப்பட்டு நின்றது.

தருமபுரியில் மே 1 அன்று புரட்சிகர அமைப்புகளின் கருத்துரிமை பறிக்கப்பட்டதைக் கண்டித்து ஒசூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.






படிப்பகம்

www.padippakam.com

### நாமக்கல்லில்...

250-க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களின் பங்கேற்புடன் மோகனூர் ரோடு அண்ணா சிலையிலிருந்து புறப்பட்ட பேரணி, பிரசுரங்கள், முழக்க அட்டைகள் மற்றும் முழக்கங்கள் மூலம் மே நாள் ஆர்ப்பாட்டச் செய்தியை மக்களிடம் கொண்டு சென்றது. ஒழுங்கமைப்புடன், கட்டுக்கோப்பாக நடத்தப்பட்ட இந்த பேரணியைப் பற்றி மக்கள் வியப்புடன் பேசிக் கொண்டனர்.

தோழர் காளியப்பன் அவர்களின் சிறப்புரை மற்றும் மையக் கலைக்குழுவின் கலைநிகழ்ச்சிகள் பகுதி மக்களைக் காந்தமாக ஈர்த்தது. 500-க்கும் மேற்பட்ட மக்கள், அசைவின்றி ஆர்வத்துடன் கூட்டம் முடியும் வரை இருந்து ஆதரவளித்தனர்.




**அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக நடைபெற்ற தஞ்சை பேரணி.**

### தஞ்சையில்...

திருவாரூர், நாகை மாவட்டங்களை மையப்படுத்தி தஞ்சையில் பேரணி, பெரும் ஆர்ப்பாட்டமாய் அமைந்தது.

தோழர் பரமானந்தம் சிறப்புரையாற்ற, சிறுவர்களின் புரட்சிகர கலைநிகழ்ச்சிகள் பொதுக்கூட்டத்தில் உணர்வு பூர்வமாக விளங்கியது.

### கடலூரில்...

மே தினத்தில் கூடத் தொழிலாளர்களுக்காக வாய்திறக்க மறுத்து அஞ்சிக் கிடந்த ஓட்டுக் கட்சிகள் மத்தியில், பெரும் நெருப்பாய் எழுந்தது புரட்சிகர அமைப்புகளின் மே தினப் பொதுக் கூட்டம்.

மஞ்சக்குப்பம் தண்ணீர் தொட்டி அருகில் நடந்த பொதுக்கூட்டத்தில் பு.மா.இ.மு. சென்னை மாவட்ட செயலர் தோழர் கணேசன் மற்றும் பு.ஜ.தொ.மு. கடலூர் மாவட்ட அமைப்பாளர் தோழர் காதர் பாஷா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

"காப்புரிமைச் சட்டம்" என்ற வடிவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உருவாக்கியிருக்கும் சுனாமி, இந்தியாவையே அழிக்கும் அபாயம் நிறைந்தது என்பதை எடுப்பாக எடுத்துரைத்தனர்.

### மதுரை, தேனியில்...

மே தின பேரணி தெற்கு வாசலிலிருந்து புறப்பட்டு, சுப்பிரமணியபுரம் பொதுக்கூட்ட மேடையை அடைந்தது. அங்கு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், தேனிமாவட்டம் கூடலூரிலும் மே தின பேரணியும் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது.

### ஓசூரில்...

புரட்சிகர அமைப்புகள் மீது மே நாள் அன்று தருமபுரியில் நடந்த போலீசு அடக்குமுறைகளை எதிர்த்து ஓசூர் காந்தி சிலை அருகில் 23.05.05 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

"தருமபுரி மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்காதே! பேச்சுரிமை, கருத்துரிமையைத் தடுக்காதே!" என்ற முழக்கத்தின் கீழ் திரளான மக்கள் தருமபுரியில் ஏவப்படும் போலீசு ஆட்சியை எதிர்த்தனர்.

**விருதுநகர், வேலூர்** ஆகிய பகுதிகளில் மே தினப் பேரணி, கூட்டங்களுக்கு போலீசு தடை விதித்தது. **கோவையில்** பேரணிக்கு தடை விதிக்கப்பட்டு, கணபதியில் பொதுக்கூட்டம் நடந்தது.

நாட்டை மீண்டும் மறுகாலனியாக்கும் எதிர்ப்புரட்சி கும்பல், தனக்கு எதிரான சிறு பொறியையும் கண்டு அஞ்சி குலைநடுங்குகிறது. புரட்சிகர அமைப்புகளின் மே தின பேரணி, பொதுக்கூட்டங்களுக்கு தடைவிதிக்கும் ஆளும் கும்பல்களின் அடக்குமுறைகள் இதையே நிரூபிக்கின்றன. •

---

**தலையங்கம் தொடர்ச்சி**

தண்டிக்கப்படவில்லை. ஒரிசாவில் ஸ்டேன்ஸ் பாதிரியாரையும் அவரது இரு குழந்தைகளையும் உயிரோடு எரித்துக் கொன்ற இந்துவெறி பயங்கரவாதியான தாராசிங்குக்கு ஒரிசா உயர்நீதி மன்றம் தூக்கு தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனை விதித்துள்ளதையும் அவனது கூட்டாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதையும் எதிர்த்து, மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மையப் புலனாய்வுத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குஜராத்தின் பயங்கரவாத முதல்வர் மோடியைக் கைது செய்யவோ, இன்னமும் அகதி முகாம்களில் அல்லற்படும் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு மறுவாழ்வளித்து பாதுகாக்கவோ இந்த ஆட்சி முயற்சிக்கவில்லை. பா.ஜ.க. ஆட்சியாளர்களால் தயாரிக்கப்பட்டு தேர்தல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காப்புரிமைச் சட்டம், தொழிலாளர் ஓய்வூதியச் சட்டம் ஆகியவற்றை பா.ஜ.க.வுக்கு மாற்று என்று கூறிக் கொள்ளும் காங்கிரசு, அப்படியே செயல்படுத்துகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, இக்கூட்டணி ஆட்சி அறிவித்துள்ள குறைந்தபட்ச பொதுத்திட்டம் ஏட்டுச் சுரைக்காயாகி விட்டது. கிராமப்புற விவசாயிகளுக்கான வேலை உத்திரவாத திட்டம், ரேஷன் விநியோகமுறையை விரிவாக்கி உறுதிப்படுத்தும் திட்டம் முதலானவை ஓராண்டாகியும் நிறைவேற்றப்படுவதற்கான ஆரம்ப அறிகுறி கூட இல்லை. நெல், கரும்பு, பருத்தி மட்டுமின்றி, மிளகாய், கடுகு உற்பத்தி செய்யும் விவசாயிகளும் விலை வீழ்ச்சியால் போண்டியாகிப் பரிதவிக்கின்றனர்.

ஆந்திர விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளைக் காட்டி பதவிக்கு வந்துள்ள ஆந்திராவின் காங்கிரசு ஆட்சியிலும் விவசாயிகளின் தற்கொலைகள் தொடர்கின்றன. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிப்பதாக உறுதியளித்து பதவியைப் பிடித்த காங்கிரசு ஆட்சி, ஆந்திர விவசாயிகளுக்குப் பட்டை நாமத்தைப் போட்டு விட்டது.

இந்த உண்மைகளை மூடி மறைத்துவிட்டு ஏகாதிபத்திய வாதிகளும் தரகுப் பெருமுதலாளிகளும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் இக்கயமையின் கூட்டணியாட்சியைத் துதிபாடி தூக்கிப் பிடிக்கின்றனர். எதிர்ப்பதாக முணுமுணுத்துக் கொண்டே, தவிடு தின்னும் ராஜாவுக்கு முறம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள். •



படிப்பகம்

www.padippakam.com

# ஆதிகேசவன் கைது:

# திடீர் வள்ளலின் கிரிமினல் பின்னணி

''ஆன்மீகச் செம்மல், அன்னதானப் பிரபு, இந்தியாவின் விடிவெள்ளி, வாழும் அம்பேத்கார், உலகப்புகழ் ஸ்ரீமான் மு.ஆதிகேசவன், பி.ஏ.பி.எல் - தேசிய தலைவர், அகில இந்திய டாக்டர் அம்பேத்கார் எஸ்.சி., எல்.டி., நலக்கூட்டமைப்பு'' இப்படியெல்லாம் சுவரொட்டிகளில் தனக்குத்தானே விளம்பரம் செய்து கொண்ட திருவாளர் ஆதிகேசவன் இப்போது அரைடஜனுக்கும் மேற்பட்ட செக்மோசடிகள் மற்றும் கொலை முயற்சி போன்ற கிரிமினல் குற்றச்சாட்டுகளின் கீழ் தமிழக போலீசால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

110 சவரன் எடை கொண்ட ஒன்றரை அடி நீள தங்கச் செயின், 21 சவரன் பிரேஸ்லெட், 35 சவரனில் 6 விரல்களில் ''சௌளவு'' மோதிரங்கள். 'ஹோம் தியேட்டர்', குளுகுளு அரங்கம், கண்காணிப்பு கேமிராக்கள் என்று மூன்று நட்சத்திர வசதி கொண்ட ஆடம்பர வீடு - அலுவலகம், அரைடஜனுக்கும் அதிகமான அதிநவீன கார்கள், ஒரு டஜனுக்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள், பண்ணை வீடுகள், நிலங்கள், தங்கம், ரொக்கம், முதலீடு என்று பல கோடி சொத்துக்கள், 50 லட்சம் ரூபாய் மதிப்பு கொண்ட விமானப் பயணம், சென்னை தாதாக்களான வெள்ளை ரவி, சேரா, அப்பு, ஆயில் பாண்டியன் ஆகியோரிடம் 'நட்பு' ஒரு புறம், மறுபுறம் முன்னாள் இந்திய 'குடியரசு' தலைவர் கே.ஆர். நாராயணன், சங்கராச்சாரி ஜெயேந்திரன் மற்றும் கலைஞர் கருணாநிதிவரை சரளமான சந்திப்புகள் நடத்துமளவுக்கு முக்கிய புள்ளியாகப் பவனி வந்துள்ளார்.

''நடமாடும் நகைக்கடை'', ''அரண்மனையில் வாழ்க்கை, தங்கத்திலே குளியல்'', ''காலையில் கோயில், மாலையில் விருந்து'', ''ஆல் இன் ஆல் அமர்க்களம்'' என்று ஆதிகேசவன் கடந்த ஒரு மாதகாலமாக தமிழக செய்தி சந்தையில் அட்டைப்பட நாயகனாக வலம் வருகிறார்.

இதற்காக, ஆதிகேசவன் செய்த முதலீடு என்ன தெரியுமா?

வடநாட்டுச் செய்திப் பத்திரிக்கைகளில் ஒரு 'துண்டு' விளம்பரம் மற்றும் அந்நிய நாடுகளில் வாழும் இந்தியர்களின் முதலீடுகளை (N.R.I.) கையாளும் வங்கியின் நடைமுறை பற்றியான அரைகுறை அறிவு! இதன் மூலம் ஆதிகேசவன் மடியில் பணம் கோடிகோடியாய் கொட்டியது! நம்ப முடிகிறதா? இதோ, ஆதிகேசவன் செய்த மந்திர விளம்பரம்!

''ரூபாய் ஒரு லட்சம் கோடி அளவுக்கு வெளிநாட்டு இந்தியர்களின் பணம் உள்ளது. இந்தப் பணம் தொழில் தொடங்குவதற்கும் தொழில் அபிவிருத்திக்கும் குறைந்த வட்டியில் கடனாக வழங்கப்படும்'' என்று வடமாநில செய்தித்தாள்களில் விளம்பரம் செய்தார். புனே, நாசிக், பம்பாய் மற்றும் டில்லி நகரங்களில் என்.ஆர்.ஐ. ஏஜெண்டுகள் என்று படித்த - உள்ளூர் 'வர்த்தக' பிரமுகர்களை நியமித்தார். அவர்கள், தூண்டிலாகச் செயல்பட்டு கொழுத்த இரைகளாகப் பார்த்து ஆதிகேசவனிடம் இழுத்து வந்தனர்.

அலங்கார பூக்கள், இறால் மற்றும் செம்மீன்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்யும் தொழில்களை விரிவுபடுத்துவதற்காக மற்றும் பல்வேறு தொழில்களுக்காக கடன் கேட்டு வந்த வட இந்திய வர்த்தகர்களை மொத்தமாக தனது வலையில் சிக்க வைத்தார் ஆதிகேசவன்.

நடமாடும் நகைக்கடையாகப் பவனி வந்த ஆதிகேசவன். (நன்றி: இந்தியா டுடே)



மத்திய ரிசர்வ் வங்கியும், வெளிநாட்டில் வாழும் இந்தியர்களும் தன்னை 'என்.ஆர்.ஐ. ஏஜெண்டாக' நியமித்து இருப்பதாக மோசடி கடிதங்களைக் காட்டி நம்ப வைத்தார். வட இந்திய ஓட்டுக் கட்சித் தலைவர்கள் மற்றும் முதன்மந்திரிகள் ஆகியோரிடம் தனக்குள்ள நெருக்கம், அதற்கான புகைப்பட ஆதாரங்கள் மற்றும் பிரமிக்க வைக்கும் தன்னுடைய ஆடம்பர வாழ்க்கை - இவற்றின் மூலம் அவர்களை எளிதாக வீழ்த்தினார். எதற்கும் மசியாத முரட்டு வாடிக்கையாளர்களை இளக வைக்க, ஆன்மீக லௌகீக, வைதீக, பார்ப்பனிய தொழில் தர்மங்களை கடைசி அஸ்திரமாக ஏவினார். வாடிக்கையாளர்களின் குறிப்பறிந்து, சிறப்பு பிரசாதங்களை பிரத்தியேகமாக வழங்கினார். பணத்தோடு வரும் வைதீக வர்த்தகர்களுக்கு காணிக்கையாக திருப்பதி லட்டு, லௌகீக வர்த்தகர்களுக்கு சீமைச் சாராயம், சிவப்பு விளக்கு சமாச்சாரங்கள், மற்றும் முரண்டுபிடிக்கும் நபர்களுக்கு உருட்டுக் கட்டை என்று கச்சிதமாக காரியத்தை சாதித்தார்.

இந்தியாவின் எல்லா மூலைகளிலிருந்தும் வந்து வணங்கி கடன் கேட்டவர்களுக்கு, 'இந்தா என்.ஆர்.ஐ. பணம்' என்று ரூ. 1,400 கோடிக்கு 'செக்' கொடுத்தார், ஆதிகேசவன். தான் கொடுத்த 'செக்'குகளுக்காக ஒரே ஒரு ரூபாயைக் கூட அவர் வங்கியில் முதலீடு செய்யவில்லை.

வங்கி இருப்பு இல்லாமல் காசோலை வழங்கிய மோசடிக் குற்றம் தன் மீது பாயாதவாறு தடுக்க, கிரிமினல் குற்ற சட்டவிதிகளின் கீழ் வராத அன்பளிப்பு காசோலைகள் (gift) வழங்கினார். இவ்வாறு, கடந்த 10 ஆண்டுகளில் என்.ஆர்.ஐ. கடன் கேட்டு வந்த சுமார் 500 பேர்களுக்கு ஏறக்குறைய ரூ. 1,400 கோடிக்கு போலி காசோலைகள் கொடுத்து அவர்களிடம் 50 கோடி ரூபாய் கமிசனை ரொக்கமாக வாங்கியிருக்கிறார், ஆதிகேசவன்.

ஆதிகேசவன் மொத்தமாக அம்பலப்பட்ட பிறகும், ஏமாந்தவர்களில் 10 பேர் கூட தைரியமாக முன்வந்து போலீசிடம் புகார் மனு அளிக்க



படிப்பகம்

www.padippakam.com




ஆதிகேசவனின் வக்கிர வாழ்க்கை: அனாதைக் குழந்தைகளுக்கு அன்னதானம் அளிக்கும் 'வள்ளல்'; துதிபாடிகளைக் கூட்டி வைத்துக் கொண்டு பிறந்த நாளைக் கொண்டாடும் 'அண்ணன்'. (நன்றி: இந்தியாடுடே)

வில்லை. காரணம் ஊரறிந்ததுதான்! ஆதிகேசவனின் அனைத்து மோசடிகளுக்கும் இதுநாள் வரையில் சட்ட ஆலோசனையும் பாதுகாப்பும் கொடுத்த அதே போலீசு கும்பல்தான் இப்போது ஆதிகேசவன் குற்றங்களை துருவித் துருவி கண்டு பிடிக்கும் நீதிமான் வேடத்துடன் திரிகிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

மும்பை, நாசிக்கைச் சேர்ந்த வர்த்தகரான ஆசிஸ் பர்தேசி என்பவர் வெளிநாடுகளுக்கு அலங்கார பூக்கள் ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தை நடத்தி வந்தார். கடந்த 1997-ஆம் ஆண்டு ரூ. 5 கோடி கடனுக்காக, ரூ. 60 லட்சம் கமிசனை ரொக்கமாக ஆதிகேசவனிடம் கொடுத்துள்ளார். அதற்கு ஈடாக, ஆதிகேசவன் அவருக்கு ஐந்து நட்சத்திர ஓட்டல் விருந்து கொடுத்தார். ஆனால், கடனை மட்டும் கடைசிவரை கொடுக்கவேயில்லை.

ஆசிஸ் பர்தேசி கொடுத்த புகாரை வாங்கிய சென்னை, மகாகவி பாரதிநகர் (ஆதிகேசவன் வீடு இருக்கும் இடம்) போலீசு, புகார் கொடுத்தவர் மீதே வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து மிரட்டியது. அவருடைய பல ஆண்டு கால விடா முயற்சிக்குப் பிறகுதான், இப்போது ஆதிகேசவன் லீலைகள் எல்லாம் அம்பலமாகியுள்ளது.

ஆதிகேசவனின் அந்தரங்க உதவியாளரான ஜெயவீரன் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் போது டி.டி.வி. (சசிகலா) தினகரனுடன் ஜெயா டி.வி.யின் தூணாக விளங்கியவன். இக்கும்பல்தான், ஆதிகேசவனை முன்னாள் 'குடியரசு' தலைவர் கே.ஆர் நாராயணன் வரை அறிமுகப்படுத்தியிருக்கிறது. ஆதிகேசவன் பிறப்பால் தலித் என்பதால் தலித் சமுதாய புரவலர், காவலர் என்று பரிவட்டம் கட்டி, கூட்டுக் கொள்ளை அடித்திருக்கிறது, போலீசு மற்றும் ஓட்டுப் பொறுக்கிகள் கூட்டம்.

போலீசு கைதுக்குப் பிறகு மேலும் வெறியோடு தன்னுடைய தலித் பிறப்பு அடையாளத்தை திரும்பத் திரும்ப காட்டுகிறார் ஆதிகேசவன். இதன் மூலம் தன்னுடைய கொள்ளைக்கு தலித் அடையாளத்தைக் கேடயமாகப் பயன்படுத்துவதில் ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களையும் விஞ்சி விட்டார்.

தன் மீது குண்டர் சட்டம் பாய்ந்தவுடன், தன் மகன் சாரதியை தலைமறைவாக்கி தன் தலைமையிலான தலித் இயக்கத்தையே போலீசு அழிப்பதாக அவர் மூலம் வதந்தி பரப்புகிறார். ''போலீசு எங்க குடும்பத்தை பழிவாங்கறாங்க சார். எங்க அப்பாவைக் கைது செய்ததும், அவர் நடத்தின அம்பேத்கர் இயக்கம் அழிஞ்சிடும்னு நினைச்சாங்க. ஆனால், ஏற்கெனவே இயக்கத்தின் பொறுப்பில் (?) இருந்தவன் என்பதால் என்னை ஒர்க்கிங் பிரஸிடெண்டாக கடந்த 12-ந் தேதி தேர்ந்தெடுத்தாங்க இயக்கத்தினர்(!). அதிலிருந்துதான் என்னையும் கைது செய்ய முயற்சிக்குறாங்க'' என்று பத்திரிகைகளுக்கு தொலைபேசியில் தலைமறைவு பேட்டியளிக்கிறார், சாரதி. மேலும், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் ஆதிகேசவனின் ஏஜெண்டாக பிடிப்பட்ட ஹேனா நேசமணி என்பவர், தானும் ஒரு தலித் புரவலர்தான் என்று அதிர்ச்சியூட்டுகிறார். ''நான் ஒரு தலித். எங்க மக்களுக்கான அமைப்பு ஒண்ணை வெச்சிக்கிட்டு உதவிகளைச் செய்துட்டு இருக்கேன். எங்க அமைப்போட தலைமை அலுவலகம் அமெரிக்காவுல இருக்கு. எனக்குச் சம்பளம் மட்டும் மாசம் நாற்பதாயிரம் கிடைக்குது. முப்பது தலித் கிராமங்களைத் தத்தெடுத்து உதவி செய்துட்டு இருக்கேன்'' என்று பேட்டியளிக்கிறார்.

தான் செய்த பகற்கொள்ளைக்காக 'ஆதிகேசவன் அன்கோ' கொஞ்சமும் கூனிக் குறுகவில்லை. மாறாக, தாங்கள் தலித்துகளின் இழிவைப் போக்க வந்த வீரபுருஷர்களாக, அதற்காக தலித் இயக்கம் கண்ட இலட்சியவாதிகளாக, அதில் உடல், பொருள், ஆவி, குடும்பம் என்று அனைத்தையும் இழந்த தலித் தியாகச் சீலர்களாக, பதற்றமே இல்லாமல் தெளிவாகப் புளுகுகிறார்கள்.

கடந்த காலங்களில் நடந்த, பங்குச் சந்தை மோசடி, இந்தியன் வங்கி மோசடி, பத்திரத்தாள் மோசடி தற்போது இணையத் தளத்தில் தினந்தோறும் நடக்கும் 'சைபர் கிரைம்' என்றழைக்கப்படும் மோசடி குற்றங்கள், வங்கி நிதி - வர்த்தக மோசடிகள் அனைத்தும் தனியார்மயம், தாராளமயம் என்ற 'கவர்ச்சிகரமான' புதிய பொருளாதார கொள்கையின் செல்ல - கள்ளக் குழந்தைகள் ஆகும். ஆதிகேசவனின் என்.ஆர்.ஐ. மற்றும் காசோலை மோசடியும் அவ்வாறான வழியில் பிறந்த 'சவலை'க் குழந்தையாகும்! காரணம், மோசடியின் மதிப்பு ரூ. 100 கோடிக்கும் கீழானதுதான் என்று புள்ளி விபரங்கள் சொல்கின்றன.

தலித் அடையாளத்தைக் கேடாக பயன்படுத்தும் ஆதிகேசவன் என்ற அசிங்கத்தை, ஆளும் வர்க்கத்தின் எச்சத்தை, உழைக்கும் தலித் மக்களே உடனடியாகப் பிடித்து தண்டிக்க வேண்டும். அந்த தண்டனை, தலித் தலைவர் எனச் சொல்லிக் கொண்டு, சமூக விரோதக் குற்றங்களில் ஈடுபடும் மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

• பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# தனியார்மயமான பொதுத்துறை நிறுவனங்களின் அவலம்

"பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைத்தால், என்ன ஆகும்?'' எனப் படித்த மேதாவிகளிடம் கேட்டுப் பாருங்கள். ''அரசின் கையில் இருந்ததைவிட, அந்த நிறுவனங்கள் நல்ல இலாபத்தில் நடக்கத் தொடங்கிவிடும்; நிர்வாகம் ஒழுங்காக நடக்கும்'' என்ற ஒரே பதில்தான் நமது செவிட்டில் வந்து விழும்.

தனியார்துறை பற்றிய இந்த (மூட) நம்பிக்கை, கடவுள் நம்பிக்கைக்கு இணையாக நமது நாட்டில் பரவிக் கிடக்கிறது. இந்த நம்பிக்கையின்படி பார்த்தால், ஏற்கெனவே அரசுக்குச் சொந்தமாக இருந்து, தாராளமயத்தின் பின் தனியாரிடம் விற்கப்பட்டுவிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் தற்பொழுது 'ஓஹோ'வென்று இருக்க வேண்டும். ஆனால், தனியார்மயமாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் பற்றி வரும் செய்திகள், மேலே சொல்லப்பட்ட 'நம்பிக்கையைப்' பொய்யாக்கும் விதத்தில்தான் இருக்கின்றன.

உதாரணத்திற்கு இந்துஸ்தான் லீவர் நிறுவனத்திடம் விற்கப்பட்ட மாடர்ன் ஃபுட்ஸை எடுத்துக் கொள்வோம். தாராளமயத்தின் பின் முற்றிலுமாகத் தனியாரிடம் விற்கப்பட்ட பிரபலமான பொதுத்துறை நிறுவனம் மாடர்ன் ஃபுட்ஸ். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இந்த விற்பனை நடந்தது. இப்பொழுது மாடர்ன் ஃபுட்ஸ் நிறுவனத்தை இந்துஸ்தான் லீவர் எப்பொழுது வேண்டுமானாலும் இழுத்து மூடிவிடலாம் என்ற சந்தேகத்தை முதலாளித்துவப் பத்திரிகைகளே எழுப்பியுள்ளன.

மாடர்ன் ஃபுட்ஸ் மிகவும் நொடித்துப் போய்விட்ட நிலையில் இந்துஸ்தான் லீவர் நிறுவனத்திற்கு விற்கப்படவில்லை. மாடர்ன் ஃபுட்ஸ் விற்கப்பட்ட பொழுது, ரொட்டி விற்பனையில், இந்திய அளவில் 40 சதவீதச் சந்தையை அந்நிறுவனம் தன் கையில் வைத்திருந்தது. அதனின் 1997-98 ஆம் ஆண்டு விற்பனை 167 கோடி ரூபாய். அந்த ஆண்டு அந்நிறுவனம் அடைந்த இலாபம் 9 கோடி ரூபாய்.

14 நவீன பேக்கரி தொழிற்சாலைகளையும்; ஏழு துணை நிறுவனங்களையும் மாடர்ன் ஃபுட்ஸ் நேரடியாக நடத்தி வந்தது. உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேலும் 17 தொழிற்சாலைகளைத் திறக்கவும் திட்டமிட்டிருந்தது. தில்லி, மும்பய், சென்னை, பெங்களூர், கொல்கத்தா உள்ளிட்டுப் பல்வேறு நகரங்களில், 4,50,000 சதுர மீட்டர் பரப்பு கொண்ட, விலை மதிப்பு மிக்க மனைகள் அந்நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்தன. இந்த நிலத்தின் மதிப்பு மட்டும் ஏறத்தாழ 550 கோடி ரூபாய் என்றும்; அந்நிறுவனத்தின் மொத்த சொத்து மதிப்பு 2,100 கோடி ரூபாய் என்றும் மதிப்பிடப்பட்டிருந்தது.

பா.ஜ.க. கூட்டணி அரசோ, மாடர்ன் ஃபுட்ஸ் நட்டத்தில் இயங்குவதாகக் கூறி, அந்நிறுவனத்தை வெறும் 150 கோடி ரூபாய்க்கு இந்துஸ்தான் லீவருக்குத் தூக்கிக் கொடுத்தது. 'நட்டத்தில்' இயங்கிய மாடர்ன் ஃபுட்ஸை, இந்துஸ்தான் லீவர் ஏமாளித்தனமாக வாங்கிப் போடவில்லை. 150 கோடி ரூபாய் மூலதனம் போட்டால், 2,100 கோடி ரூபாய் சொத்து சொந்தமாகும் என்று கணக்குப் போட்டது, லீவர் நிறுவனம்.

மாடர்ன் ஃபுட்ஸ் அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டதை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எதிர்த்த பொழுது, தனியார்மயமாக்கல் துறையின் அமைச்சராக இருந்த அருண் ஜெட்லி, ''ரொட்டி சுடுவது அரசாங்கத்தின் வேலையில்லை'' எனப் பதில் அளித்தார். இந்துஸ்தான் லீவர் நிறுவனமும் இப்பொழுது ரொட்டி சுடத் தயாராக இல்லை. மாறாக, மாடர்ன் ஃபுட்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலங்களை விற்பதன் மூலம், தான் போட்ட மூலதனத்திற்கு மேல் பல நூறு கோடி ரூபாய்களைக் குறுக்கு வழியில் இலாபமாக அடையத் திட்டம் போடுகிறது.

மாடர்ன் ஃபுட்ஸ் அரசிடம் இருந்த பொழுது, ரொட்டி தயாரிப்பதற்காக 21 தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. மாடர்ன் ஃபுட்ஸை வாங்கிய இந்துஸ்தான்

இந்துஸ்தான் லீவர் நிறுவனத்தால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள், மே 1 அன்று மாடர்ன் ஃபுட்ஸ் தில்லி தொழிற்சாலையின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

லீவர், கடந்த ஐந்தே ஆண்டுகளுக்குள் பெரும்பாலான தொழிற்சாலைகளை நட்டக் கணக்கு காட்டியே இழுத்து மூடி விட்டது. இந்த நட்டத்தை ஈடுகட்டுவதற்காக, மாடர்ன் ஃபுட்ஸுக்குச் சொந்தமான நிலங்களை ஒன்றன் பின் ஒன்றாக விற்கவும் தொடங்கியிருக்கிறது. பெங்களூர் தொழிற்சாலை நிலத்தை 2.48 கோடி ரூபாய்க்கு விற்று ருசி கண்டுள்ள லீவர், தில்லி தொழிற்சாலை நிலத்தை 20 கோடி ரூபாய்க்கு விற்கத் திட்டமிட்டுள்ளது. இப்படி மாடர்ன் ஃபுட்ஸ் நிறுவனத்தை வைத்துக் கொண்டு ரியல் எஸ்டேட் வியாபாரத்தை நடத்தத் தொடங்கி விட்ட லீவர், ரொட்டி தயாரிப்பதை காண்டிராக்டர்களிடம் ஒப்படைத்து விட்டது.

''மாடர்ன் ஃபுட்ஸைத் தொடர்ந்து நடத்தும் எண்ணமெல்லாம் லீவர் நிறுவனத்திற்குக் கிடையாது; எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் மாடர்ன் ஃபுட்ஸின் சொத்துக்களை விற்று விடுவதுதான் லீவரின் நோக்கம்'' என்ற உண்மையை மாடர்ன் ஃபுட்ஸ் தொழிலாளர் சங்கம், மாடர்ன் ஃபுட்ஸ் விற்கப்படுவதற்கு முன்பிருந்தே அம்பலப்படுத்தி வருகிறது. இதனாலேயே, கோவிந்த் யாதவ், வீ.கே. நாரங், கணேஷ் தாகூர் ஆகிய மூன்று தொழிற்சங்கத் தலைவர்கள், லீவர் நிறுவனத்தால் வேலையில் இருந்து நீக்கப்பட்டு, பழிவாங்கப்பட்டனர். பா.ஜ.க. கூட்டணி அரசோ, தொழிற்சங்கம் விடுத்த எச்சரிக்கையை அலட்சியப்படுத்தியதோடு, லீவர் நிறுவனம் தொழிற்சங்கத் தலைவர்களைப் பழிவாங்குவதற்கும் துணை நின்றது.

மேலும், இந்த விற்பனையை எதிர்த்து நின்ற தொழிலாளர்களைச் சமாதானப்படுத்துவதற்காக, தனியார்மயமாக்கல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், ''பொதுத்துறை நிறுவனங்களை வாங்கும் தனியார் முதலாளிகள், அரசாங்கத்தின் அனுமதியில்லாமல், அப்பொதுத்துறை நிறுவனத்தின் சொத்துக்களை விற்பதைத் தடுக்கும் விதியினை விற்பனை ஒப்பந்தத்தில் போடலாம்'' என ஆலோசனை கூறி, இந்த விற்பனையைப் புனிதப்படுத்த முயன்றனர்.

ஆனால், பா.ஜ.க. கூட்டணி அரசாங்கமோ, மாடர்ன் ஃபுட்ஸ் சொத்துக்களை அபகரிக்கும் லீவர் நிறுவனத்தின் சுதந்திரத்தில் மயிரளவிற்குக் கூடத் தலையிடுவதற்கு மறுத்துவிட்டது. லீவர் நிறுவனம், மாடர்ன் ஃபுட்ஸ் நிறுவனத்தின் சொத்துக்களை விற்கும் வேகத்தைப் பார்த்தாலே, இந்த அற்பமான விதியைக் கூடப் போடாமல் மாடர்ன் ஃபுட்ஸ் விற்கப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.



தனியார்மயம் என்ற பெயரில் வெறும் 153 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட மும்பய் ஜுஹு சென்டார் ஐந்து நட்சத்திர விடுதி: சட்டப்பூர்வக் கொள்ளை.

உண்மை இப்படியிருக்க, பா.ஜ.க. கூட்டணி அரசில் நிதியமைச்சராக இருந்த ஜஸ்வந்த் சிங்கும், தனியார்மயமாக்கல் துறையின் அமைச்சராக இருந்த அருண் ஷோரியும், ''லீவர் நிறுவனம், ரொட்டி தயாரிக்கும் வியாபார நடவடிக்கைகளுக்கு மட்டுமே மாடர்ன் ஃபுட்ஸின் சொத்துக்களை பயன்படுத்த முடியும்; நிலங்களைத் தன்னிச்சையாக விற்க முடியாது; அப்படி விற்பனை நடந்தால், அது பற்றி அரசாங்கம் விசாரணை நடத்தும்'' என்றெல்லாம் நாடாளுமன்றத்திலேயே புளுகி, இம்மோசடி விற்பனையை நியாயப்படுத்தினார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, பா.ஜ.க.வைச் சேர்ந்த அருண் ஜெயிட்லி, ''மாடர்ன் ஃபுட்ஸ் தனியார்மயமாக்கப்பட்டு விட்டதால், இனி அந்நிறுவனத்தில் வேலை வாய்ப்பு பெருகும்'' எனப் பூ சுற்றியதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

மாடர்ன் ஃபுட்ஸ் லீவருக்கு விற்கப்படுவதற்கு முன்பாக, அந்நிறுவனத்தில் 2,037 தொழிலாளர்கள் நிரந்தரமாகப் பணியாற்றி வந்தனர். மாடர்ன் ஃபுட்ஸ், லீவரின் கைகளுக்குப் போன மூன்றே ஆண்டுகளுக்குள், 1,030 தொழிலாளர்கள் வேலையில் இருந்து தூக்கியெறியப்பட்டு விட்டனர். இப்பொழுது தில்லி கிளையை விற்க முடிவெடுத்துள்ள லீவர், அக்கிளையில் விருப்ப ஓய்வு திட்டத்தை அமல்படுத்தி வருவதால், நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 700 ஆகக் குறைந்து விட்டது என மாடர்ன் ஃபுட்ஸ் தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது. இப்படியே போனால், இன்னும் ஒரிரு ஆண்டுகளில் ''மாடர்ன் பிரெட்'' என்பதே பழங்கதையாகி விடக் கூடும்.

தனியார்மயம் என்ற பெயரில் மாடர்ன் ஃபுட்ஸ் என்ற நிறுவனம் இருந்த சுவடே தெரியாமல் மொட்டையடிக்கப்படுவதை விதிவிலக்கான ஒன்றாகப் பார்க்க முடியாது. பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் தனியார்மயமாக்கல் துறையின் அமைச்சராக அருண் ஷோரி இருந்தபொழுது, ஏர் - இந்தியா நிறுவனத்துக்குச் சொந்தமான ஜுஹு சென்டார் ஐந்து நட்சத்திர விடுதியை தனியாரிடம் விற்பதென முடிவு செய்யப்பட்டது. இந்த விடுதியை 246 கோடி ரூபாய்க்குக் குறையாமல் விற்பதென முடிவெடுத்திருந்த மைய அரசு, பின்னர் விடுதியின் மதிப்பை 101 கோடி ரூபாய் எனத் தடாலடியாகக் குறைத்து விட்டது.

இந்த விடுதியை விற்பதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியில் உறுப்பினராக இருந்த அஜித் கெர்கருக்கே ஜுஹு சென்டார் விடுதி விற்கப்பட்டது. டான்சி நிலத்தை விற்பதென முடிவெடுத்த ஜெயாவே, அந்த நிலத்தை வாங்கியதைப் போல, இந்த விடுதி விற்பனையும் நடந்து முடிந்தது.

மும்பய் சர்வதேச விமான நிலையம் அருகே, ஆறு ஏக்கர் பரப்பளவில்



படிப்பகம்

www.padippakam.com

371 அறைகளுடன் அமைந்துள்ள இந்த விடுதி, வெறும் 153 கோடி ரூபாய்க்கு அஜித் கெர்கருக்கு விற்கப் பட்டது. இந்த மூலதனத்தைக் கூட அஜித் கெர்கர் தனது சொந்த பாக்கெட்டில் இருந்து எடுத்துப் போடவில்லை. அமைச்சர் அருண் ஷோரி, ''இந்த விடுதியை வாங்குவதற்கு அஜித் கெர்கருக்கு உடனே கடன் கொடுக்க வேண்டும்'' என பேங்க் ஆப் இந்தியா, யூனியன் பேங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், யூனிட் டிரஸ்ட் வங்கி ஆகிய பொதுத்துறை நிறுவனங்களுக்கு உத்தரவு போட்டு, தனது அமைச்சகத்தின் பொறுப்பிலேயே கடன் வாங்கிக் கொடுத்தார்.

இப்படிப்பட்ட அதிகார அத்துமீறல்கள், முறைகேடுகள் மூலமாகத்தான் ஜுஹு சென்டார் விடுதி தனியார்மயமாக்கப்பட்டது. இத்தனியார்மயத்தால் அவ்விடுதியில் வேலைபார்த்து வந்த 600 நிரந்தரத் தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டு, அவர்களின் எதிர்கால வாழ்வு சிதைக்கப்பட்டு விட்டது. அதேசமயம், ஜுஹு சென்டாரின் புது முதலாளி அஜித் கெர்கரோ, இந்த விடுதியை 200 கோடி ரூபாய் இலாபத்தில் (350 கோடி ரூபாய்க்கு) பிரான்சு நாட்டைச் சேர்ந்த நிறுவனத்திடம் விற்றுவிட பேரம் நடத்திக் கொண்டிருக்கிறார். உமி கொண்டு வந்தவன் அவல் தின்ற கதைதான் இது.

''அஜித் கெர்கர் இந்த விடுதியை வேறு யாருக்காவது நல்ல விலைக்கு விற்று விடுவார் என்பது எங்களுக்கு முன்னரே தெரியும்'' என முன்னாள் அமைச்சர் அருண்ஷோரி இப்பொழுது பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்திருக்கிறார். மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் சொத்தை, முதலாளிகள் நோகாமல் ஏப்பம் விடுவதற்கு அரசாங்கம் தரகனாகச் செயல்படுகிறது என்பதற்கு அருண்ஷோரியின் வாக்கு மூலமே சாட்சி.

அரசாங்கத்தின் சொத்தைச் சுருட்டிக் கொண்டால், முன்பு அதற்குப் பெயர் ஊழல்; இப்பொழுது அதற்குப் பெயர் தனியார்மயம். சந்தேகமிருந்தால், அரபிக் கடலில் உள்ள பன்னா, முக்தா என்ற (20,000 கோடி ரூபாய் பெறுமான) இரு எண்ணெய் வயல்களை, வெறும் 12 கோடி ரூபாய்க்கு ரிலையன்ஸ்-என்ரான் கூட்டணிக்குத் தூக்கிக் கொடுத்ததற்கு எதிராக நடந்த வழக்கில், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பைப் படித்துக் கொள்ளுங்கள்!

• ரஹீம்

# நாய் வாலை நிமிர்த்த முடியாது கிரிமினல் போலீசைத் திருத்த முடியாது

**''போலீசு துறையைக் கலைத்திடு!''** - இப்படியொரு முழக்கம் கொண்ட பதாகையை (Banner) ஏப்ரல் மாத இறுதியில் மும்பய் நகரில் காண முடிந்தது. இது, ஏதாவதொரு புரட்சிகர அமைப்பின் வேலையாயிருக்கும் என நீங்கள் நினைத்தால், அது தவறு. மும்பய் நகர மக்கள்தான், தாங்களே இந்தப் புரட்சிகரமான முழக்கத்தை வடிவமைத்து, பேனர்களில் எழுதி, மும்பய் நகரின் பல இடங்களில் கட்டியிருந்தார்கள். ஏப்ரல் 21 அன்று மும்பயில் நடந்த சம்பவம்தான், போலீசுக்கு எதிரான போராட்டத்தில் இப்படியொரு புரட்சிகரமான தீர்வைத் தன்னெழுச்சியாக முன்வைக்கும் நிலைக்கு மும்பய் நகர மக்களைத் தள்ளியது.

மும்பயில் உள்ள ''மெரைன் டிரைவ்'' கடற்கரையோரச் சாலையை, சென்னை - மெரீனா கடற்கரைச் சாலைக்கு இணையாகக் கூறலாம். பல்வேறு விதமான அலுவலகங்களும், மக்கள் நடமாட்டமும், போக்குவரத்து வாகன நெரிசலும் நிறைந்த பகுதி இது. இப்பகுதியைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த புறக்காவல் நிலையத்தில் (Police out-post) செம்பூர் பகுதியைச் சேர்ந்த 17 வயதான கல்லூரி மாணவி ஏப்ரல் 21 அன்று சுனில் ஆத்மராம் மோர் என்ற போலீசு மிருகத்தால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டார்.

அக்கல்லூரி மாணவி விசாரணைக் கைதியோ, விசாரணைக்காக அழைத்து வரப்பட்டவரோ கிடையாது. சம்பவம் நடந்த அன்று, அவர் தனது ஆண் நண்பருடன் மெரைன் டிரைவ் சாலையில் நடந்து வந்திருக்கிறார். அப்பொழுது பணியில் இருந்த சுனில் ஆத்மராம் மோர், அப்பெண்ணின் ஆண் நண்பரை மிரட்டி அனுப்பிவிட்டு, அப்பெண்ணை விசாரிக்க வேண்டும் என போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று பாலியல் பலாத்காரப்படுத்தியிருக்கிறான்.

அக்கல்லூரி மாணவி அடுத்தடுத்து மூன்று முறை பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டிருப்பதாகவும்; அந்த சமயத்தில் அப்போலீசுக்காரன் குடித்திருந்ததாகவும் மருத்துவ ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. இச்சம்பவம் ஆள் நடமாட்டமே இல்லாத நள்ளிரவு நேரத்தில் நடக்கவில்லை. பகல் நேரத்தில், மாலை 4.30 மணி போல், மக்கள் நடமாடிக் கொண்டிருந்த நேரத்தில் நடந்தது.

ஒரு பொறுக்கியோ, ரவுடியோ செய்யத் துணியாத காரியத்தை, ஒரு போலீசுக்காரனால் துணிந்து செய்ய முடிகிறது என்றால், ''காக்கிச் சட்டையை மாட்டிக் கொண்டு எதையும் செய்யலாம்; அதற்காக யாரும் தன்னைத் தட்டிக் கேட்கவோ, தண்டித்து விடவோ முடியாது'' என்ற அதிகாரத் திமிரோடு போலீசுத் துறை வளர்க்கப்பட்டிருப்பதுதான் காரணம்.

காக்கிச் சட்டை ரவுடிகளின் இந்தப் பொறுக்கித்தனத்தையும், பாசிசத் திமிரையும் எதிர்த்து பெண்கள் அமைப்புகள் மட்டுமின்றி, கல்லூரி மாணவ - மாணவிகள், பெற்றோர் - ஆசிரியர் கழகங்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் என மும்பய் நகரின் பல்வேறு தட்டு மக்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயான கிதிகா வோரா என்ற பெண், ''நான் எனது இரண்டு பெண்களிடமும் உங்களுக்கு என்ன நடந்தாலும், போலீசிடம் மட்டும் உதவி கேட்டுப் போய்விடாதீர்கள் எனச் சொல்லியிருக்கிறேன். பெரும்பாலான போலீசுக்காரர்கள், பார்வையாலேயே கற்பழித்து விடுவார்கள்'' என்கிறார்.

சிறீவத்ஸவா என்ற தாய், ''அந்தப் போலீசுக்காரனை அம்மணப்படுத்தி, நடுத்தெருவில் தூக்கில் போட வேண்டும்'' எனத் தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கிறார்.

இச்சம்பவம் நடந்த மெரைன் டிரைவ் பகுதியில் வசிக்கும் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான இன்னொரு பெண், ''அவனின் கண்களைக் குத்திக் குருடாக்கிய பிறகு தூக்கில் போட வேண்டும்; பத்திரிக்கைகள் இந்தச் சம்பவத்தை சும்மா விட்டுவிடக்



படிப்பகம்

www.padippakam.com

கூடாது'' எனக் கூறுகிறார்.

12 வயது சிறுமிக்குத் தாயான இன்னொருவரோ, ''அவன் சாதாரண போலீசுக்காரன் என்பதால் மாட்டிக் கொண்டான். அவனே உயர் அதிகாரியாக இருந்தால், இந்தச் சம்பவத்தை மூடி மறைத்து, அவனைக் காப்பாற்றியிருப்பார்கள்'' என போலீசுத்துறையின் நாணயத்தைப் புட்டு வைக்கிறார்.

மும்பய் நகர மக்கள் போலீசின் மீது எவ்வளவு தூரம் ஆத்திரம் அடைந்து இருக்கிறார்கள் என்பதற்கு இன்னொரு சம்பவத்தையும் ஆதாரமாகக் கூறலாம். கடந்த மே 10-ஆம் தேதி மும்பய் நகரைச் சேர்ந்த தானே ரயில் நிலையத்தில், இரண்டு நபர்கள், 42 வயதான ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டனர். ரயில் நிலையத்தில் இருந்த பொது மக்கள் அந்த நபர்களைப் பிடித்து விசாரித்துக் கொண்டிருந்த பொழுது, அந்த இரண்டு பேரும் போலீசுக்காரர்கள் எனத் தெரிந்ததும், வாயால் விசாரிப்பதை நிறுத்தி விட்டு, அவர்கள் இருவரையும் ஆத்திரம் தீர உதைத்துவிட்டு அதற்குப் பிறகுதான் ரயில்வே போலீசிடம் ஒப்படைத்தனர்.



**கல்லூரி மாணவியைப் பலாத்காரப்படுத்திய போலீசைத் தாமதமின்றித் தண்டிக்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய மும்பையைச் சேர்ந்த மகளிர் அமைப்பினர், போலீசு அமைத்திருந்த தடுப்பு வேலியைத் தாண்டிச் செல்லப் போராடுகின்றனர்.**

பொதுமக்களின் ஆத்திரத்தைத் தணித்து, அவர்களிடம் தனது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள மகாராஷ்டிரா போலீசு பல தரப்பட்ட செப்படி வித்தைகளில் இறங்கியிருக்கிறது. பாலியல் பலாத்காரம் நடந்த மெரைன் டிரைவ் புறக்காவல் நிலையத்தை இடித்து தரைமட்டமாக்கி விட்டது; குற்றவாளி சுனில் ஆத்மராம் மோருக்கு ஓய்வூதியம், சேமநல நிதி சேமிப்பு, பணிக் கொடை போன்ற எந்தவிதமான பணச் சலுகைகளும் கிடைத்துவிடாதபடி, சிறப்புச் சட்டத்தின் கீழ் பணி நீக்கம் செய்துவிட்டது.

இது ஒருபுறமிருக்க, ஐ.பி.எஸ். அதிகாரிகளின் மனைவிகள் சங்கம், பாதிக்கப்பட்ட பெண்ணின் உயர் படிப்புச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்து, பாவ மன்னிப்பு கோரியிருக்கிறார்கள். பெண் போலீசார், ''போலீசுத் துறையில் உள்ள அனைவரும் மோசமானவர்கள் கிடையாது. எங்களைக் கண்ணியத்துடன் தான் நடத்துகிறார்கள்'' எனப் பிரச்சாரம் செய்து, போலீசு துறையை உத்தமனாகக் காட்ட முயலுகிறார்கள்.

ஆனாலும், போலீசின் குறுக்குப் புத்தி வேலை செய்யாமல் இருக்குமா? ''அக்கல்லூரி மாணவி தன்னைப் பலாத்காரப்படுத்த வந்த போலீசுக்காரனை எதிர்த்துப் போராட வாய்ப்புகள் இருந்தும் கூட, போராடவில்லை. பயத்தினால் கூட, அப்பெண் அடிபணிந்து போயிருக்கலாம்'' என மகாராஷ்டிரா போலீசு அவதூறு பிரச்சாரத்தை நடத்தத் தொடங்கியிருக்கிறது. பாதிக்கப்பட்ட பெண்ணின் நடத்தையைச் சந்தேகிப்பதன் மூலம், தனது சகாவின் குற்றத்தை நியாயப்படுத்த முயலுகிறார்கள்.

போலீசாரின் இந்த ஆணாதிக்கத் திமிர்த்தனத்திற்கு, இந்து மதவெறி பிடித்த சிவசேனா கட்சி ஒத்து ஊதுகிறது. ''செம்பூர் பகுதியில் வசிக்கும் அந்தப் பெண், ஆண் நண்பருடன் மெரைன் டிரைவ் பகுதிக்கு ஏன் சென்றார்?'' என போலீசுக்கு ஆதரவாகக் கேள்வி எழுப்புகிறது. இதைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், ''பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது; மீறி வந்தால், கற்பழிக்கப்படுவீர்கள்'' என்பதுதான். ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் போட்ட ஆணையை, இந்து மதவெறிக் கும்பல், 'மதச்சார்பற்ற' இந்தியாவில் அமல்படுத்திவிடத்துடிக்கிறது.

இது மட்டுமின்றி, ''இந்தியப் பெண்கள் இந்து கலாச்சாரப்படி ஆடை அணியாமல், அரைகுறை ஆடையுடன் வெளியே நடமாடுவதால்தான் கற்பழிப்புகள் பெருகி விட்டதாக'' ஒரு வக்கிர கண்டுபிடிப்பையும், சிவசேனா தனது பத்திரிகையில் தலையங்கமாக எழுதி, பாதிக்கப்பட்ட பெண்களையே குற்றவாளி ஆக்கிவிட்டது.

இந்து கலாச்சாரப்படி சேலை கட்டும் பெண்களை போலீசு தெய்வமாக மதிப்பது போலச் சரடு விடுகிறது, சிவசேனா. சிதம்பரம் பத்மினியின் சேலையை உருவி, நிர்வாணமாக்கி அண்ணாமலை நகர் போலீசு நிலையத்தில் பாலியல் பலாத்காரப்படுத்தப்படவில்லையா? மாயா தியாகி என்ற நிறைமாத கர்ப்பிணியை, கணவனின் கண் எதிரேயே, சேலையை உருவி போலீசார் பலாத்காரப்படுத்தவில்லையா? இவ்வளவு ஏன், பஞ்சாப் தீவிரவாதிகளை நர வேட்டையாடியதற்காக ''ஹீரோ'' வாகப் புகழப்பட்ட ஐ.பி.எஸ் அதிகாரி கே.பி.எஸ். கில், ஒரு மாலை நேர விருந்தில், பல பெரிய மனிதர்கள் முன்னிலையில், ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பின்புறத்தில் தட்டி, தனது காமவெறியைக் காட்டிக் கொள்ளவில்லையா? இப்படிப்பட்ட அதிகாரத் திமிரும், காமவெறியும் கொண்ட போலீசாரிடமிருந்து இந்தியப் பெண்களை இரும்புக் கவசம் கூடக் காப்பாற்றிவிடாது என்பதுதான் உண்மை.

•••

ஒவ்வொரு அரைமணி நேரத்துக்கு ஒரு முறை, இந்தியாவின் ஏதாவது ஒரு மூலையில், யாராவது ஒரு பெண் பாலியல் பலாத்காரத்திற்குப் பலியாவதாக புள்ளிவிவரமொன்று கூறுகிறது. பெரும்பாலான பாலியல் பலாத்கார சம்பவங்களுக்கும், போலீ



படிப்பகம்

www.padippakam.com

சுக்கும் நேரடி தொடர்பில்லை என்பது உண்மைதான். எனினும், இவ்வழக்குகளை விசாரிக்கும் போலீசின் அணுகுமுறை பாதிக்கப்பட்ட பெண்ணை முதல் குற்றவாளியாக்குவதாகவே அமைந்து விடுகிறது.

சமீபத்தில் தலைநகர் தில்லியில் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த 20 வயதான இளம் பெண், தனது வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு விடுதியில் தேநீர் சாப்பிட்டுவிட்டுப் போவதற்காக, தனது தோழியுடன் வீட்டைவிட்டு வெளியே வந்திருக்கிறார். அப்பொழுது ஒரு காரில் வந்து கொண்டிருந்த நான்கு பேர், கண்ணிமைக்கும் நேரத்தில், அப்பெண்ணை காருக்குள் இழுத்துப் போட்டுக் கடத்திச் சென்று, பாலியல் பலாத்காரப்படுத்திய பின், நடுத்தெருவில் தூக்கி எறிந்துவிட்டுத் தப்பிவிட்டனர்.



**தனியார் மருத்துவமனையொன்றில் செவிலியராக வேலை பார்த்த பெண் (முகத்தை மூடி இருப்பவர்) பணியில் இருந்த பொழுதே பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்ட வழக்கில், தில்லி நீதிமன்றம் அவரிடம் குற்றவாளியையே திருமணம் செய்து கொள்ளச் சொல்லி சமரசம் பேசியது. அப்பெண் திடமாக மறுத்தபின்தான், நீதிபதி குற்றவாளியைத் தண்டிக்க முன் வந்தார்.**

இவ்வழக்கை விசாரித்து வரும் தில்லி போலீசார் அப்பெண்ணிடம் கேட்ட முதல் கேள்வியே ''உன்னை யார் ராத்திரி 2 மணிக்கு வீட்டை விட்டு வெளியே வரச் சொன்னது?'' என்பதுதான். வேலைக்குப் போய்க் கொண்டே படிக்கும் பெண், இரவு நேரத்தில் தான் தேர்வுக்குத் தயாரிக்க முடியும். இரவு நேரத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே காலடி எடுத்து வைப்பதே ஆபத்தானது என்றால், இரவு நேர ஷிப்டுகளில் இனி பெண்களை வேலைக்கு அமர்த்தலாம் என உச்சநீதி மன்றம் உத்திரவு போட்டுள்ளதே, அதையும் பெண்களின் பாதுகாப்பு கருதி போலீசார் எதிர்க்க வேண்டியதுதானே?

போலீசு விசாரணையின் போதும், அதன்பின் நடக்கும் நீதிமன்ற விசாரணையின் போதும் பாதிக்கப்பட்ட பெண்கள் மீண்டுமொரு முறை வார்த்தைகளால் பாலியல் பலாத்காரப்படுத்தப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. போலீசு நிலையத்தில் பதிவாகும் பாலியல் பலாத்கார வழக்குகளில், 5 **சதவீத** வழக்குகளில் கூட குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை. இதற்கு சட்டத்தின் ஓட்டைகள் மட்டுமின்றி, நீதிபதிகளின் மேல்சாதி - ஆணாதிக்கத் திமிரையும் காரணமாகக் கூறலாம்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள சந்திரபூர் போலீசு நிலையத்தில் மதுரா என்ற பழங்குடியினப் பெண், இரண்டு போலீசு மிருகங்களால் அடுத்தடுத்து பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டார். இவ்வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றம், ''மதுரா, தன்னைக் காப்பாற்றும்படி கூச்சல் போட்டதாகத் தெரியவில்லை. எனவே, அவர் சம்மதத்துடன்தான் உடலுறவு நடந்திருப்பதாகத்'' தீர்ப்புக் கூறி, குற்றவாளிகளை விடுதலை செய்தது.

கேரளாவில் நடந்த சூர்யநெல்லி பாலியல் பலாத்கார வழக்கில் இளஞ் சிறுமி ஒருவர் கடத்தப்பட்டு, 40 நாட்களாகத் தொடர்ந்து பல பெரிய மனிதர்களால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டார். மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கில் தொடர்புடைய 36 குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டனர். ஆனால், கேரள உயர்நீதி மன்றமோ, இவர்களுள் 35 பேரை நிரபராதிகளாகக் கூறி விடுதலை செய்துவிட்டது.

''அச்சிறுமி எளிதாகத் தப்பித்துப் போயிருக்க முடியும்; ஆனால், அவள் அப்படிச் செய்யவில்லை. எனவே அவள் சம்மத்துடன்தான் எல்லாம் நடந்திருக்கிறது'' எனத் தீர்ப்பெழுதி, பாதிக்கப்பட்ட சிறுமியை நடத்தை கெட்டவளாக முத்திரை குத்திவிட்டது, கேரள உயர்நீதி மன்றம். இவ்வழக்கில் தண்டிக்கப்பட்ட குற்றவாளியும் கூட, பாலியல் பலாத்கார குற்றத்திற்காகத் தண்டிக்கப்படவில்லை. மாறாக அச்சிறுமியை வைத்து ''விபச்சாரம் நடத்தினார்'' என்ற நீதிமன்றத்தின் கண்டுபிடிப்புக்காகத் தண்டிக்கப்பட்டுள்ளார்.

மும்பய் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த பாலியல் பலாத்கார வழக்கொன்றில், குற்றவாளி அப்பெண்ணை மணந்து கொள்வதாகக் கூறி பாவ மன்னிப்பு கேட்டிருக்கிறான். உடனே நீதிபதி பி.சி. சிங், பாதிக்கப்பட்ட பெண்ணின் 'சம்மதத்தைப்' பெற்று, ''இந்தக் குற்றத்திற்கு இதுதான் பரிகாரம்'' எனத் தீர்ப்பெழுதி, குற்றவாளியை விடுதலை செய்துவிட்டார். கிராமப்புறங்களில் மேல்சாதி கும்பலால் நடத்தப்படும் கட்டப் பஞ்சாயத்துகளுக்கும், இதற்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா?

இதற்கெல்லாம் மேலாக, போலீசும், இராணுவமும் 'தீவிரவாதிகளை வேட்டையாடுவது' என்ற பெயரில் நடத்தும் பாலியல் வன்முறைகளை, அரசாங்கமும், நீதிமன்றமும் குற்றமாகவே பார்ப்பதில்லை. வீரப்பன் வேட்டையின் பொழுது, பழங்குடியினப் பெண்களைப் பாலியல் பலாத்காரப்படுத்திய அதிரடிப் படை ரவுடிகள் மீது ஏதாவது ஒரு வழக்கு பதிவாகியிருக்கிறதா? மாறாக, அவ்வன்முறை தீவிரவாதத்திற்கு எதிரான செயலாகச் சித்தரிக்கப்பட்டு, காக்கிச் சட்டை ரவுடிகளுக்கு பணமும், பதவி உயர்வும் பரிசாக அளிக்கப்பட்டது.

போலீசு கொட்டடியில் நடக்கும் பாலியல் பலாத்காரங்களைத் தடுக்க போலீசுக்கு மனித உரிமைகள் பற்றியும், பெண்களை அணுகுவது குறித்தும் போதிக்க வேண்டும் என்பதெல்லாம் புலிக்கு பசுத்தோலை போர்த்திவிடுவது போன்றதுதான். சட்டபூர்வ ரவுடி கும்பலான போலீசை அமைப்பைக் கலைக்கக் கோருவது மட்டுமே நியாயமான தீர்வாக இருக்க முடியும். போலீசு என்ற தனிவகை சாதிக்குப் பதிலாக ஆயுதந்தாங்கிய மக்கள் படை; நீதிமன்றங்களுக்குப் பதிலாக மக்கள் சர்வாதிகார மன்றங்கள் - இப்புரட்சிகர அமைப்புகளைக் கட்டியமைப்பதன் மூலம் மட்டுமே, பெண்களுக்கு எதிரான குற்றங்களைப் புரியும் குற்றவாளிகள், எந்தவிதத்திலும் தப்பித்து விடாதபடி தண்டிக்க முடியும்!

**• செல்வம்**



படிப்பகம்

www.padippakam.com

○ கரண்ட் பில் கட்டாத சாமானிய மக்களின் வீடுகளில் ப்யூஸைப் பிடுங்கும் ஆட்சியாளர்கள், மக்கள் வரிப்பணத்திலிருந்து என்ரானின் 5,250 கோடி ரூபாய் கடனை அடைக்கக் கிளம்பியுள்ள நிலையில், இம்மக்கள் விரோதிகளை எதைக் கொண்டு அடிப்பது? இவர்களுக்குச் சாமரம் வீசிக் கொண்டிருக்கும் போலி கம்யூனிசத் துரோகிகளை எதைக் கொண்டு அடிப்பது?

**- பிரியதர்ஷினி, சென்னை.**

○ ஏழைகளின் கையை வெட்டி அவர்களுக்கே "சூப்" தயாரித்துக் கொடுக்கும் தன்னார்வக் குழுக்களின் நுண்தொழில் மோசடித்தனத்தையும் இதன் பின்னே மறைந்துள்ள ஏகாதிபத்திய சதியையும் அம்பலப்படுத்திக் காட்டிய கட்டுரை சிறப்பு. திறந்த வீட்டுக்குள் புகுந்த ஓநாயாகிய என்ரானுக்கு விருந்து வைக்கும் கசாப்புக்காரனாகி விட்டார் ப.சிதம்பரம். இந்த சிதம்பர ரகசியத்தை மூடி மறைத்து அன்னிய முதலீடுகளை வெட்கமின்றி ஆதரித்து நியாயப்படுத்த மாநாடு கூட்டி மக்களை ஏய்க்கின்றனர், 'மார்க்சிஸ்டுகள்'!

**- கதிரவன், சென்னை.**

○ நம்ம ஊர் ஊத்தவாயன் சங்கராச்சாரிக்குப் போட்டியாக உள்ள உலகமகா பிற்போக்காளன் போப் ஜான்பாலின் உண்மை உருவத்தைத் திரைகிழித்துக் காட்டி, கிறித்துவ மதவெறியர்களுக்குச் சம்மட்டி அடி கொடுப்பதாக பு.ஜ. இதழ் அமைந்துள்ளது. இந்தக் கழிசடையின் சாவுக்கு மூன்று நாள் அரசு முறை துக்கம்; ஆனால், சுனாமியால் கொல்லப்பட்ட உழைக்கும் மக்களுக்கு அஞ்சலியோ, துக்கமோ, நிவாரணமோ இல்லை. அரசு என்பது எந்த வர்க்கத்தின் நலனுக்கானது என்பதை இச்சம்பவமே நிரூபித்துக் காட்டுகிறது.

**- புதியவன், கிருஷ்ணகிரி.**

○ தமிழர் கண்ணோட்டம் கும்பலின் சந்தர்ப்பவாத - பித்தலாட்ட அரசியலானது, கள்ளச் சாராய ரௌடிகளை எதிர்த்துப் போராடித் தியாகியான தோழர் பீட்டரையும், அவர் சார்ந்த அமைப்பையும் வக்கிரமாக இழிவுபடுத்துமளவுக்குப் போயிருப்பது மிகக் கேவலமானது. இப்பிழைப்புவாதிகள், ஜெயகாந்தன் ஒரு தமிழன் என்பதால், தமிழர்களையே இழிவுபடுத்தும் அப்பார்ப்பனக் கைக்கூலி எழுத்தாளனுக்கு ஞானபீடப் பரிசு வழங்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். மெட்ரிகுலேசன் பள்ளி - அதுவும் ஏகாதிபத்திய - பார்ப்பன சேவையில் ஈடுபட்ட அன்னிபெசண்ட் பெயரில் பள்ளி நடத்தும் 'தமிழ் ஆர்வலரிடம்' காசு வாங்கிவிட்டுப் பூசி மெழுகும் இப்பிழைப்புவாதிகளுக்கு, புரட்சிகர இயக்கத்தினரைப் பற்றி விமர்சிக்க என்ன அருகதை இருக்கிறது?

**- செம்முகில், ஈரோடு.**

○ ஜெயகாந்தனின் தமிழின விரோதப் போக்கையும் பார்ப்பனக் கைக்கூலித்தனத்தையும், அவரது எண்ணங்கள் சமூகத்துக்கு




# வாசகர் கடிதம்

எதிராக உள்ளதையும் அக்குவேறு ஆணிவேராகப் பிட்டு வைத்துக் காட்டி, எந்தக் கொம்பனாக இருந்தாலும் துணிவோடு எதிர்க்கும் புதிய ஜனநாயகத்தின் சமுதாயப் பணி வாழ்க!

**- தங்க. சங்கரபாண்டியன், மணலிப்புதுநகர்.**

○ விவசாயிகளின் வாழ்வைப் பறித்து, அவர்களைச் சிறைப்பிடிக்கவும் வகைசெய்யும் புதிய விதைச் சட்டம் பற்றிய தலையங்கக் கட்டுரை, நாட்டைச் சூழ்ந்துள்ள பேரபாயத்தை எடுப்பாக உணர்த்துகிறது. இதழின் அனைத்து கட்டுரைகளும் கருத்தாழமிக்கவை.

**- பி. சண்முகவேல், கொட்டாரக்குறிச்சி.**

○ கிராமப்புற ஏழைகளின் இரத்தத்தை வட்டியாக உறிஞ்சும் அட்டைகள்தான் சுய உதவிக் குழுக்கள் என்பதையும், தனியார்மய - தாராளமயச் சூழலில் மக்கள் போராட்டங்களைத் திசைதிருப்புவதற்கான ஏகாதிபத்திய சதிகார ஏற்பாடுதான் நுண்கடன் - நுண்தொழில் என்பதையும் பு.ஜ. தெளிவாக எடுத்தியம்பியுள்ளது.

**- ஜான், சென்னை.**

○ பங்காளி வாங்கிய கடனுக்கு பெண்டாட்டி தாலியை அறுத்த கதையாக, என்ரானின் கொள்ளைக்கு நமது வரிப்பணத்தைச் சூறையாடக் கிளம்பிவிட்டது அரசு என்பதை என்ரான் பற்றிய கட்டுரை தெளிவாக்கியது. கோடிக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள வைப்பு நிதியையும் சூறையாடக் கிளம்பிவிட்டார், நிதியமைச்சர் ப.சிதம்பரம். வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் இச்சதியை அம்பலப்படுத்தி முறியடிக்க முன்வரவேண்டும்.

**- தளபதி, சென்னை.**

○ போப் ஜான் பால்-II பற்றிய கட்டுரை, அவருடைய பிற்போக்குப் பின்னணியை நன்கு விளக்கியுள்ளது. எனினும் கட்டுரையானது, விவரங்களின் தொகுப்பாகவும் உரைநடை பாணியிலும் எழுதப்பட்டுள்ளதால் படிக்க சலிப்பூட்டுகிறது. இதுபோன்ற பழமைவாத பிற்போக்கு மதநிறுவனங்கள் அனைத்தும் வீழ்த்தப்பட வேண்டிய அவசியத்தை விளக்கி எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**- ஜீவா, சென்னை.**

○ நுண்கடன் - நுண்தொழிலின் பின்னே மறைந்துள்ள ஏகாதிபத்திய சதியையும் தன்னார்வக் குழுக்களின் தரகு வேலையையும் அம்பலப்படுத்திக் காட்டிய கட்டுரை சிறப்பு. மூன்றாவது மொழிப் போர் நடத்தக் கிளம்பிய சூரப்புலிகளின் சரணாகதி - சந்தர்ப்பவாதத்தைத் தோலுரித்துக் காட்டியது அருமை. தொழிலாளர் வைப்பு நிதியும் சூறையாடப்படவுள்ள அபாயத்தை பு.ஜ. மட்டுமே முன்கூட்டியே எச்சரித்துப் போராட அறைகூவியுள்ளது.

**- வாசகர் வட்டம், பென்னாகரம்.**

○ ஊடகங்கள் போப் ஜான்பாலை ஒரு மாபெரும் மகானாக, ஏசுவின் மறு அவதாரமாகச் சித்தரித்த போது, பு.ஜ. கட்டுரையானது அவர் எத்தகையதொரு இழிந்த பழமை - பிற்போக்குவாதி என்பதை விளக்கிக் காட்டியது. என்ரான் கொள்ளை பற்றிய கட்டுரையானது நாடு வேகமாக மறுகாலனியாக்கப்பட்டு வருவதை உணர்த்துகிறது.

**- சுடர், சென்னை.**

○ பானை சோற்றைப் பதம் பார்த்தாற்போல, அன்னிய முதலீடுகளை வரவேற்று மாநாட்டில் தீர்மானம் போட்டுள்ள செயல் ஒன்றே சி.பி.எம். கட்சியின் துரோகத்தனத்திற்குச் சான்று கூறப் போதுமானது. தமிழ் சினிமா கதாநாயகர்கள் உருவாக்கும் பொறுக்கி கலாச்சாரத்தை முறியடிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக, சினிமா கழிசடைகள் பற்றிய கட்டுரை அமைந்துள்ளது.

**- வாசகர் வட்டம், சாத்தூர்.**

○ தமிழ் சினிமா கதாநாயகர்கள் அடிக்கும் கொள்ளை, பரப்பும் சீரழிவு, இக்கழிசடைகளுக்கு ஜெயா அரசின் போலீசு பாதுகாப்பு ஆகியன பற்றி புதிய கோணத்தில் வெளியான கட்டுரை பிரச்சாரத்துக்குப் பெரிதும் உதவியது. புனிதமானவராகச் சித்தரிக்கப்படும் போப் ஜான் பால், அமெரிக்க ஆசியுடன் கம்யூனிச எதிர்ப்புக் கொள்கையோடு, பல ஆட்சிக் கவிழ்ப்புகள், சதிகள் - கொலைகளில் தொடர்புடைய பிற்போக்குவாதிதான் என்பதை மறுக்கமுடியாத ஆதாரங்களுடன் பு.ஜ. உணர்த்தியுள்ளது. ஏகாதிபத்திய கைக்கூலிகளான தன்னார்வக் குழுக்களின் பலவகைப்பட்ட சதிகளை அடுத்தடுத்து அம்பலப்படுத்தி வருவது சிறப்பு.

**- வாசகர் வட்டம், திருச்சி.**



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா வழங்கிய ஜனநாயகம் அல்லற்படும் ஈராக்கிய மக்கள்

## – ஜார்ஜ் டபிள்யு. புஷ்ஷிற்கு ஒரு பகிரங்கக் கடிதம்

**''விடுதலை'', ''ஜனநாயகம்'' என்பதற்கு அமெரிக்க மேலாதிக்கவாதிகளின் அகராதியில் உள்ள பொருள் என்ன என்பதை ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு நிரூபித்துக் காட்டிவிட்டது. அமெரிக்க ஆக்கிரமிப்பின் கொடூரத்தையும் ஈராக்கிய மக்களின் வாழ்க்கை எப்படி உருக்குலைந்து கிடக்கிறது என்பதையும், பாக்தாத் நகரைச் சேர்ந்த பொறியாளர் காஸ்வான் அல் முக்தார், அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு எழுதியுள்ள இப்பகிரங்கக் கடிதம் படம் பிடித்துக் காட்டுகிறது. குமுறிக் கொண்டிருக்கும் ஈராக்கிய மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள இக்கடிதம் ''மூன்றாம் உலக மறுமலர்ச்சி'' (Third world Resurgence) என்ற ஆங்கில இதழில் வெளிவந்தது. அக்கடிதத்தைச் சுருக்கமாக வெளியிட்டுள்ளோம். — ஆசிரியர் குழு.**

பெறுநர்: ஜார்ஜ் டபிள்யு. புஷ்,
அமெரிக்காவின் மேதகு அதிபர்.

அன்பார்ந்த அதிபர் அவர்களே,

அமெரிக்கா தானே உருவாக்கிக் கொண்டு நடத்திய ஈராக்கிய ஆக்கிரமிப்பினால் அல்லற்படும் மக்களின் அவலத்தை, ஒரு சாமானிய ஈராக்கிய குடிமகன் என்ற முறையில் எனது கருத்துக்களை உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

'சித்திரவதைக் கூடங்களும் இரகசிய போலீசும் முற்றாகவும் நிரந்தரமாகவும் ஒழிக்கப்பட்டு விட்டது' என்று ஈராக்கிய மக்களிடம் நீங்கள் ஒன்றரை ஆண்டுக்கு முன்பு அடித்துச் சொன்னீர்கள். நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கக் கூடும் என்று அப்போது நான் நேர்மையாக நம்பினேன். ஆனால், 2003-ஆம் ஆண்டின் மே மாதம் முதற்கொண்டே உங்கள் படையினர் ஈராக்கிய மக்களைச் சித்திரவதை செய்து வருகினறனர் என்பதைப் பின்னர்தான் நான் அறிந்தேன். இத்தகைய மனித உரிமை அத்துமீறல்களும் அட்டூழியங்களும் நடப்பது உங்களுடைய தளபதிகளுக்குத் தெரியும் என்பதையும், தமது உயரதிகாரிகளுக்கு அவர்கள் இது குறித்து அறிக்கைகள் அனுப்பியுள்ளனர் என்பதையும் பின்னர் நான் அறிந்தேன்.

ஈராக்கியர்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களால் சித்திரவதை செய்யப்படுவதைப் பற்றிய உண்மைகளை அறிந்திருந்த போதிலும், நீங்கள் சித்திரவதைக்கு ஆளானவர்களிடம் மன்னிப்புக் கோரவில்லை. மாறாக, 'சில கறுப்பு ஆடுகள்' மீது பழிபோட்டு விட்டு அலட்சியமாகவே நீங்கள் நடந்து கொண்டீர்கள். நீங்கள் இவ்வாறு சில கறுப்பு ஆடுகள் மீது குற்றம் சாட்டி கருத்து தெரிவித்த போதிலும், உங்கள் படைகள் ஈராக்கில் நடத்தும் சித்திரவதைகளோ அல்லது மனித உரிமை அத்துமீறல்களோ நின்றுவிடவில்லை. ஈராக்கில் உள்ள அமெரிக்க சிறைச் சாலைகளில் ஈராக்கியர்கள் வதைக்கப்படும் செய்திகள் இன்றும் கூட வந்தவண்ணமே உள்ளன. ஈராக்கிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் அமெரிக்கா இருந்த போதிலும், அமெரிக்காவின் பாதுகாப்புக்கு இவ்வாறு சித்திரவதைகள் செய்வது அவசியமானது என்று உங்கள் ஆலோசகர்கள் கூறுவார்கள் என நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

உங்களுடைய 'விருப்பப்பூர்வமான கூட்டணி'யின் இதர பங்காளிகளது நடத்தையும் கூட எந்த விதத்திலும் மேலானதாக இல்லை. பிரிட்டிஷ் படைகளும் டேனிஷ் படைகளும் சிறைபிடிக்கப்பட்ட ஈராக்கியர்களைச் சித்திரவதை செய்து கொண்டுதான் இருக்கின்றன. உங்கள் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட 'புதிய ஈராக்கிய படை'யினரும் தமது சகோதரர்களான ஈராக்கியர்களை வதைப்பதை, மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகளிலிருந்து நாங்கள் நன்கறிய முடிகிறது. மேதகு அதிபர் அவர்களே, ஒரு விசயம் எனக்குத் தெளிவாக தெரிகிறது. உங்களது 'விடுதலை'க்கு முன்னர் ஒரு தீய சக்தியால் வதைக்கப்பட்ட நாங்கள், இப்போது நான்கு தீய சக்திகளால் வதைக்கப்படுகிறோம். நீங்கள் அறிவித்ததற்கு மாறாக, சித்திரவதைக் கூடங்கள் எப்போதைக்கும் நிரந்தரமாகவே நீடித்திருக்கும் என்றே தோன்றுகிறது.

நடவடிக்கைகள், அவற்றின் விளைவுகளைக் கொண்டுதான் மதிப்பிடப்படுகின்றன. ஆரவாரங்கள் - சவடால்களால் மதிப்பிடப்படுவதில்லை. உங்கள் படைவீரர்களைப் போலவே சாமானிய ஈராக்கியர்களின் உயிர்களும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளன. ஈராக்கை நீங்கள் கைப்பற்றியிருப்பதன் விளைவாகத் தோன்றியுள்ள பொதுவான அராஜகத்தினால் ஈராக்கியர்களின் வாழ்வு துன்பதுயரமிக்கதாகி விட்டது. நாங்கள் வெளியில் நடமாடவே அஞ்சுகிறோம்.

சாமானிய ஈராக்கிய மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள கவச வண்டிகளிலோ, குண்டு துளைக்காத கார்களிலோ செல்வதில்லை. கிரிமினல் கும்பல்களால் கொல்லப்படும் ஈராக்கியர்களை விட, அமெரிக்கப் படைகளால் தான் அப்பாவி ஈராக்கியர்கள் அதிகமாகக் கொல்லப்படுகின்றனர். வெறிபிடித்த உங்கள் படையினர் சட்டத்தின் முன் பதில் சொல்ல வேண்டிய எவ்விதப் பொறுப்புமின்றி, இச்சட்ட விரோதக் கொலைக் குற்றங்களிலிருந்து தப்பி சர்வ சுதந்திரமாக இருக்கிறார்கள். இது நீங்கள் நன்கறிந்த விசயம்தான். தமது நடவடிக்கைகளுக்கு இந்தக் கொலைகாரர்கள் 'வருத்தம்' தெரிவிப்பதுகூட இல்லை என்பதை நான் நேரிலே கண்டிருக்கிறேன்.

### பண்பார்ந்த வாழ்க்கைத் தரங்களிலிருந்து ஈராக்கியர்களுக்கு 'விடுதலை'!

மேதகு அதிபர் அவர்களே, மீண்டும் ஒரு விசயத்தை உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். உங்களது 'விடுவிக்கப்பட்ட' ஈராக்கில் இன்று 60%-க்கும் மேலானோர் வேலையின்றிப் பரிதவிக்கின்றனர். ஆனால், 'விடுதலை'க்கு முன்பு ஏறத்தாழ 30% பேர்தான் வேலையின்றி



படிப்பகம்

www.padippakam.com

இருந்தனர். கௌரவமாக வேலை செய்து சம்பாதிக்க முடியாமல் போனவர்களின் எண்ணிக்கையை உங்களது நடவடிக்கை இரட்டிப்பாக்கி விட்டது.

2004-ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் உங்களது அமெரிக்க நாடாளுமன்றம், ஈராக் நிலவரம் பற்றிய அறிக்கையை வெளியிட்டது. அதில், 2003-ஆம் ஆண்டு மே மாதத்தில் - அதாவது, உங்களது படையெடுப்புக்கு அடுத்த சில மாதங்களில், ஈராக்கின் மொத்தமுள்ள 18 மாநிலங்களில், 7 மாநிலங்களுக்கு ஒரு நாளைக்கு 16 மணிநேரம் மின்சாரம் கிடைத்தது. ஆனால், ஓராண்டுக்குப் பின்னர் ஒரேயொரு மாநிலத்தில்தான் அந்தளவுக்கு மின்சாரம் கிடைத்தது. இப்போதைய நிலவரப்படி, 50 இலட்சம் மக்கள் வாழும் பாக்தாத் நகரத்தில் ஒரு நாளைக்கு 6 மணி நேரம் மின்சாரம் கிடைத்தால், அது எங்களுக்கு அதிர்ஷ்டம்தான்.

கடந்த 22 மாத காலம் உங்களது ஆக்கிரமிக்கப்பட்ட ஆட்சியில் மருத்துவ - சுகாதாரச் சேவைகள் படுமோசமாக சீரழிந்து விட்டன. இன்னமும் கூட மருத்துவமனைகளில் மிகச் சாதாரணமான மருந்துப் பொருட்களுக்குப் பஞ்சம் நீடிக்கிறது. வெளியில் கூட மருந்துகள் கிடைப்பதில்லை. பாதுகாப்பு என்ற பெயரிலான தடாலடி நடவடிக்கைகளாலும் தெருக்கள் அடைபட்டுக் கிடப்பதாலும் மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே சாமானிய ஈராக்கியர்கள் மருத்துவமனைக்கு வரமுடிகிறது. மருத்துவமனைகளிலோ மருத்துவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. மருந்து இல்லாமல் எரிச்சலடையும் நோயாளிகளின் உறவினர்கள் ஏதும் செய்ய இயலாத நிலையில் உள்ள மருத்துவர்களைத் திட்டித் தீர்க்கின்றனர்; ஏன், சில சமயங்களில் அவர்களைத் தாக்கவும் செய்கின்றனர்.

பாதுகாப்பின்மையாலும், கையாலாகாத நிலையில் போலீசுத் துறை இருப்பதாலும், பெரும் பிணைத் தொகை கேட்டு நூற்றுக்கணக்கான மருத்துவர்கள் கிரிமினல் குற்றக் கும்பல்களால் கடத்தப்பட்டுள்ளனர். கடத்தப்படுவீர்கள் என்று சிலர் அச்சுறுத்தப்படுகின்றனர். இதன் விளைவாக, நூற்றுக்கணக்கான திறமையான மருத்துவர்கள் நாட்டை விட்டே ஓடிவிட்டனர்; மருத்துவ - சுகாதாரச் சேவைகள் இதனால் மேலும் மோசமாகச் சீரழிந்து விட்டது. மேதகு அதிபர் அவர்களே, இந்தத் திறமையான மருத்துவர்கள் ஈராக்கிய 'சர்வாதிகாரி'யின் ஆட்சியின்போது நாட்டை விட்டு ஓடவில்லை. ஆனால், உங்களது 'விடுதலை செய்யப்பட்ட' ஈராக்கில் நிலவும் அராஜக - குழப்ப நிலைமையாலும், காட்டாட்சியினாலும் தான் நாட்டை விட்டே ஓடுகின்றனர்.

உங்கள் ஆளுகையின் கீழுள்ள ஈராக்கிலிருந்து ஒரு நாளைக்கு ஒரு லட்சம் பீப்பாய் சுத்திகரிக்கப்பட்ட டீசல் துருக்கி வழியாகக் கடத்தப்பட்டு வருவதை பதிவேடுகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. உங்கள் அமெரிக்க அரசாங்கத்துக்கும் இது நன்றாகத் தெரியும். சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை மிகையாக ஏற்றுமதி செய்யுமளவுக்கு ஈராக் திறன் பெற்றுள்ள நாடு என்பதையே இந்த விவரங்கள் காட்டுகின்றன.



அமெரிக்க இராணுவத் துப்பாக்கி முனையின் கீழ், கண்கள் கட்டப்பட்ட நிலையில் இராணுவச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படும் ஈராக்கியர்கள்.

1991-ஆம் ஆண்டில் நடந்த போரைப் போல, தற்போது ஈராக் 'விடுதலை'யின்போது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் தாக்குதல் இலக்காக்கப்படவில்லை. தற்போதைய அமெரிக்கப் படையெடுப்பில் அவற்றுக்கு ஏற்பட்ட சேதம் குறைவானது தான் என்றே யாவரும் கருதுவர். எனினும், ஈராக் 'விடுதலை' செய்யப்பட்டு 22 மாதங்களாகியும், சுத்திகரிப்பு நிலையங்கள் ஏன் சீர்செய்யப்பட்டு இயக்கப்படவில்லை என்பது புரியாத புதிராகவே உள்ளது. துருக்கி, குவைத், சவூதி அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து மட்டுமல்லாமல், இசுரேலிலிருந்தும் கூட சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் ஏன் தொடர்ந்து இறக்குமதி செய்யப்படுகிறது? எரிவாயுவை ஏற்றுமதி செய்யும் நாடான எமது நாட்டிற்குள் ஏன் எரிவாயு தொடர்ந்து இறக்குமதி செய்யப்படுகிறது? எங்கள் நாட்டின் பணம் ஏன் இப்படிக் கேட்பாரின்றிச் சூறையாடப்படுகிறது?

1991-ஆம் ஆண்டில் அமெரிக்கக் குண்டு வீச்சால் சேதமடைந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை ஒரு சில மாதங்களிலேயே நாங்கள் சீர் செய்து இயக்கினோம். உங்களது பொருளாதாரத் தடைகள், மேலை நாடுகளின் உதவி மறுப்பு ஆகிய பல்வேறு இடர்ப்பாடுகளினூடே நாங்கள் இதைச் சாதித்தோம். 13 ஆண்டுகளாக நாங்கள் அவற்றைத் தொடர்ந்து இயக்கி எண்ணெய் ஏற்றுமதி செய்தோம். இதுபோலவே, மின்சார விநியோகத்தை ஒரு சில மாதங்களிலேயே பழைய நிலைமைக்கு ஈராக்கிய மக்கள் கொண்டு வந்தனர். 1991-ஆம் ஆண்டின் குண்டு வீச்சில் சேதமடைந்த அனைத்து கட்டிடங்களையும் ஒரே ஆண்டிற்குள் ஈராக்கிய மக்கள் சீரமைத்து மீண்டும் கட்டியெழுப்பினர். ஆனால், ஈராக் 'விடுதலை' அடைந்து 22 மாதங்களுக்குப் பின்னரும், மறுகட்டுமான வேலை எதுவும் செய்யப்படாததைக் கண்டு என்மனம் மிகவும் வேதனைப்படுகிறது.

1991-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலின் போது, தொழில் யுகத்துக்கு முந்தைய பின்தங்கிய நிலைக்கு ஈராக் தள்ளப்படும் என்று அமெரிக்கா அறிவித்ததை தாங்கள் நன்கறிவீர்கள். கண்ணில் பட்டதையெல்லாம் குண்டு வீசி அழித்து நீங்கள் உங்களது வல்லாண்மையைக் காட்டினீர்கள். ஆனால், எவையெல்லாம் குண்டு வீச்சில் அழிக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com




ஈராக் ஆக்கிரமிப்பின் இரண்டாம் ஆண்டு நிறைவடைந்ததையொட்டி, அமெரிக்க இராணுவத்தை வெளியேறக் கோரி, அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

னவோ, அவையனைத்தையும் ஈராக்கிய மக்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் மீண்டும் கட்டியெழுப்பினர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உங்களது பொருளாதாரத் தடைகளினூடே எமது நாடு புதிய கட்டுமானத் திட்டங்களை வகுத்து இலக்கை நிறைவேற்றியது. ஒரு ஈராக்கியன் என்ற முறையில் இந்தச் சாதனைகளுக்காக நான் பெருமைப்படுகிறேன். ஈராக்கியர்களாகிய நாங்கள் மறுகட்டுமான வேலைகளில் ஒரு புதிய சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளோம். ஆனால், நீங்கள் 'விடுதலை'யைச் சாதித்து 22 மாதங்களுக்குப் பின்னரும் உருப்படியாக கண்ணுக்குப் புலப்படும்படியாக எந்தவொரு மறுகட்டுமான வேலையும் நடைபெறவில்லை. சாதனைகள் ஈட்டுவதில் அமெரிக்கா படுமோசமாகத் தோல்வியடைந்து விட்டதையே இவையனைத்தும் காட்டுகின்றன.

1991-இலிருந்து 13 ஆண்டுகளாக எமது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ரேசன் உணவைக் கொண்டுதான் ஈராக்கியர்கள் வாழ்ந்து வந்தனர். ஈராக்கின் சர்வாதிகார அரசாங்கம் எங்களைக் கொள்ளையடிப்பதாகவும் ஒரு நாளைக்கு சராசரியாக ஒரு நபருக்கு 2200 கலோரி அளவுக்கு மட்டுமே உணவளிப்பதாகவும் நீங்கள் அப்போது பிரச்சாரம் செய்தீர்கள். உங்களால் 'விடுவிக்கப்பட்டுள்ள' ஈராக்கின் உங்களது அரசாங்கமும் இன்னமும் அதே 2200 கலோரி அளவுக்கான உணவையே ரேசனில் தருகிறது.

உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவும் ரேசனில் அவற்றை வழங்கவும் எமது ஈராக் அரசாங்கம் மாதந்தோறும் 15 கோடி டாலர்தான் செலவிடுவது வழக்கம். உங்களது 'விடுவிக்கப்பட்ட' ஈராக்கிய அரசாங்கத்தின் கணக்கு-தணிக்கை அதிகாரியின் கூற்றுப்படியே, ஒரே ஆண்டில் 880 கோடி டாலர் தொகை கணக்கில் வராமல் களவாடப்பட்டுள்ளது. மேதகு அதிபர் அவர்களே, இந்தத் தொகையைக் கொண்டு 60 மாதங்களுக்கு எம் நாட்டு மக்களுக்கு ரேசனில் உணவளிக்க முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? எங்கள் பணத்தைச் செலவிடுவதில் நிதிரீதியாகப் பொறுப்பின்மையும் நேர்மையின்மையும் வெளிப்படையாகவே தெரிகிறது. இதுதான் ஈராக் விடுவிக்கப்பட்டதன் நோக்கமா என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. ஈராக்கிய மக்கள் வகை தொகையின்றி சூறையாடப்படுகிறார்கள் என்று வெளிப்படையாகச் சொல்வதற்காக நான் வருந்துகிறேன். மேலும், எங்கள் நாட்டின் வளமான செல்வங்களிலிருந்து நாங்கள் பிய்த்தெறியப்பட்டு 'விடுதலை' செய்யப்பட்டுள்ளோம்.

மேதகு அதிபர் அவர்களே, உங்களது 'விடுதலை' நடவடிக்கையால் எமது குழந்தைகள் அஞ்சி பீதியில் உறைந்து விட்டன. உங்களது நடவடிக்கையால் அவர்களுடைய எதிர்காலம் நாசமாக்கப்பட்டுள்ளதை அவர்கள் ஒருபோதும் மறக்கவே மாட்டார்கள். பீதிக்குள்ளாக்கப்பட்ட எமது குழந்தைகளை உங்கள் நாட்டின் குழந்தைகள் எதிர்கொண்டே தீரவேண்டியிருக்கும் என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். எங்கள் குழந்தைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகவும் அட்டூழியங்களுக்காகவும் உங்கள் குழந்தைகள் கட்டாயம் பதில் சொல்ல வேண்டியிருக்கும். எங்களிடமிருந்து களவாடப்பட்ட பணத்தை உங்கள் குழந்தைகள் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். அவர்கள் இவற்றுக்காகக் கொடுக்க வேண்டிய விலை பிரம்மாண்டமானதாக இருக்கும் என்பதை நான் அறுதியிட்டுக் கூற முடியும்.

உங்களுடைய ஆலோசகர்களைப் போல வண்ணமயமான சித்திரத்தை வரைந்து காட்ட எனக்கு விருப்பமில்லை. பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் குவிந்துள்ளன, அல்-கொய்தாவுடன் ஈராக்குக்குத் தொடர்புள்ளது, அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் (உலக வர்த்தக மையக் கட்டிடங்கள்) தகர்த்தெறியப்பட்டதில் ஈராக்குக்குத் தொடர்புள்ளது, ஈராக்கிய மக்கள் அமெரிக்கப் படைகளை 'விடுதலையை வழங்கிய இரட்சகர்களாக'க் கருதி வரவேற்கின்றனர் — என்றெல்லாம் அவர்கள் உங்களிடம் சொன்னார்கள். அவர்கள் சொன்னதெல்லாம் அப்பட்டமான பொய்கள் என்று நிரூபணமாகிவிட்டன. மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்பதற்கான தருணம் இப்போது உங்களுக்கு வந்துள்ளது.

அமெரிக்கா உபதேசிக்கும் 'சுதந்திரம் அல்லது ஜனநாயகத்திற்காக' நாங்கள் அமெரிக்க மக்களை வெறுக்கவில்லை. அமெரிக்க நாட்டை வெறுக்கவில்லை. எமது நாட்டின் அப்பாவி மக்களுக்கு எதிரான உங்களது படைகளின் கொடுங்குற்றங்களையே, பெருந்தீங்குகளையே நாங்கள் வெறுக்கிறோம். உங்கள் படைகள் ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளையே - சீர்குலைவையே நாங்கள் வெறுக்கிறோம்.

- வணக்கங்களுடன்

**காஸ்வான் அல் முக்தார்,** பாக்தாத்,

ஆக்கிரமிக்கப்பட்ட ஈராக்.

Tom Dispatch.com website

< www.tomdispatch.com>

(Third world resurgence, No. 175, Mar.05; www.twnside.org.sg).



படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



**கள்ளர் சாதிவெறியர்களின் அனைத்து உரிமைகளையும் பறிக்கக்கோரி, மதுரை நகரில் நடந்த புரட்சிகர அமைப்புகளின் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்.**

நிர்வாகம், இக்கும்பல்களைத் தண்டிக்க மறுக்கும் உயர்சாதி வெறி கொண்ட பார்ப்பன பாசிச ஜெயலலிதா - இவர்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களின் இடஒதுக்கீட்டைப் பறிக்கும் தலித் மக்களின் நேரடி எதிரிகள்'', என்று பகிரங்கமாக எச்சரித்தனர்.

''நாங்கள் பெரும்பான்மையாக உள்ள ஊரில் சிறுபான்மை தலித் சாதியைச் சேர்ந்த ஒருவர் எப்படிப் பஞ்சாயத்துத் தலைவராக முடியும்?' என்கிறார்கள், சாதி வெறி பிடித்த கள்ளர்கள். 'கீரிப்பட்டியில் இருக்கும் குலதெய்வ சாமி நஞ்சுண்டம்மன், ஒரு தலித் பஞ்சாயத்து தலைவராக வந்தால் ஏற்றுக் கொள்ள மாட்டாள்; ஊர் குற்றமாகி விடும்' என்கிறார்கள். 'தேர்தல் வேண்டும் என்றால் கீரிப்பட்டியை அரசாங்கம் பொது தொகுதியாக மாற்ற வேண்டும். தலித் மக்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றால் அவர்கள் ஊரை விட்டு வெளியேறட்டும்' என்கிறார்கள் கள்ள சாதிவெறியர்கள்.

''ஜனநாயகம், சுயமரியாதை, சாதி ஒழிப்பு போன்ற கொள்கைகளில் நம்பிக்கைக் கொண்ட நம் ஒவ்வொருவருடைய வாயிலும் மலத்தைத் திணித்து ''உங்களால் என்ன புடுங்க முடியும்?'' என்று நம்மை எகத்தாளம் செய்கிறார்கள் கீரிப்பட்டியின் சாதிவெறியர்கள். இந்திய அரசியல் சட்டத்தின் மீது மட்டுமல்ல, மனித குல நாகரிகத்தின் மீதே காரித் துப்புகிறார்கள், சாதிவெறியர்கள்.

''பாப்பாபட்டி, கீரிப்பட்டியில் தலித் மக்களை அவர்களின் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கும் கள்ளர் சாதிவெறியர்களை அதே வழியில் திருப்பி தாக்குவோம்'' என்று முழங்கினார்கள் ஆர்ப்பாட்டத்தினர். ''சாதிவெறியர்களின் நிலஉரிமை, ஓட்டுரிமை, இட ஒதுக்கீட்டுரிமை ஆகியவைகளை அவர்களிடமிருந்து பறித்துத் தண்டிப்போம்'' என்று போராட்டத் தீயை மூட்டினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய கள்ளர் சாதியில் பிறந்த ஜனநாயக பற்றாளர்கள் மற்றும் புரட்சிகர அமைப்பைச் சேர்ந்த தோழர்கள், வறிய தலித்துக்களை எதிர்க்கும் கள்ளர் சாதிவெறியர்களின் பேடித்தனத்தையும் கோழைத்தனத்தையும் வன்மையாகச் சாடினார்கள். ''நாங்களும் பிறப்பால் கள்ளன் தான் ...... உங்க கௌரவம், உங்க குல தெய்வம் எல்லாம் யார்கிட்ட வாலாட்டும்னு எங்களுக்குத் தெரியும்'' என்று நெருப்பாய்ச் சாடினார்கள்.

''கிடா வெட்டுத் தடைச் சட்டம் வந்தபோது உங்க வீரம் எங்க போச்சு? கிடா கேக்குற உங்க குலதெய்வத்தின் வீரம், அன்று எங்க போச்சு? கையில் முறுக்குச்சட்டி, அரிகரண்டி தூக்கிக்கினு நீங்க பிழைப்பைத் தேடி ஆந்திராவுக்கு ஓடும்போது, உங்க கௌரவம் எங்க போச்சு? உங்க ஊர்ல, நாயுடுவோ, கவுண்டரோ நின்னா நீங்க பெரும்பான்மை பேச முடியுமா? அதிகம் போனா, ஏதாவது கேட்டு பேரம் பேசுவீங்க! அந்தஸ்து-அதிகாரம் உள்ள கள்ளன் கிட்ட, ஏழைக் கள்ளன் போய் பொண்ணு கேட்டு மீசையை முறுக்கு பாப்போம்!'' என்று சாதிவெறியர்களைத் தோலுரித்துத் தொங்க விட்டனர்.

''கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தல்களுக்கு மட்டும் துணை இராணுவம், போலீசு, அதிகார வர்க்கக் கும்பல்களைக் கொண்டு வந்து கொட்டி, துப்பாக்கியைக் காட்டி மிரட்டி, வெளியூர்காரர்களை விரட்டி, 'கிரிமினல்'களிடமிருந்து வாக்காளர்களைப் பாதுகாத்த அரசு நிர்வாகம், கீரிப்பட்டியில் மட்டும் ஏன் சாதிவெறி கிரிமினல்களுக்கு வாலாட்டுகிறது?'' என்று கேள்வி எழுப்பினார்கள்.

ஆக, அனைத்து ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் தலித் மக்களின் தனித் தொகுதியைப் பறிப்பதற்கு உடந்தை என்பதை விளக்கினார்கள். ''கள்ளர் சாதவெறியர்களின் பெயரைக் கூட குறிப்பிட அஞ்சும் ஓட்டுப் பொறுக்கிகள் எப்படி தலித்துகளின் உரிமையை மீட்டெடுக்க முடியும்? இப்படியே, 10 வருடம் முடிந்து விட்டால் தானாக சுழற்சி முறையில் கீரிப்பட்டி பொதுத் தொகுதியாக மாறிவிடும் என்று சாதி வெறியர்களும், ஓட்டுச் சீட்டுத் தலைவர்களும் காலத்தைக் கடத்துகிறார்கள்'' என்று சாதிவெறியர்களுக்கும், ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் இருக்கும் மறைமுகக் கூட்டைத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள், ஆர்ப்பாட்டத்தில் பேசிய தோழர்கள்.

''பாப்பாபட்டி, கீரிப்பட்டி வன்கொடுமைக்கு முடிவு கட்டுவோம்!'' என்ற அறைகூவல், ஆர்ப்பாட்டம் முடிவதற்கு முன்பே பெரும் நெருப்பாக, புரட்சிகரமான செயல் வடிவம் பெற்று ஒளிர்ந்தது!

ஆர்ப்பாட்டத்தைக் காணவந்த நாட்டார்மங்கலம் (தலித்துக்கள் மிரட்டப்பட்டு, வேட்பு மனுக்கூட தாக்கல் செய்யாமல் இருக்கும் இடம்) தொகுதியைச் சேர்ந்த ஆதிக்க சாதியில் பிறந்த இளைஞர்கள், தங்கள் மீது குத்தப்பட்டுள்ள சாதி அடையாளத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, ''நாங்களும் உங்கள் போராட்டத்திற்குத் தோள் கொடுக்கிறோம்'' என்று முன் வந்தனர். தங்கள் பகுதிகளில் பிரச்சாரத்தை விரிவுபடுத்த, ஆலோசனைகளையும் ஆர்ப்பாட்ட சுவரொட்டிகளையும் அக்கறையுடன் கேட்டு வாங்கினர். அச்சுவரொட்டிகளைத் தங்கள் ஊரில் ஒட்டியதோடு, தங்கள் ஊரில் பொதுக்கூட்டம் நடத்தவும் கோரினர். கள்ளர் சாதிவெறியர்களுக்கு எதிரான புரட்சிகர அமைப்புகளின் சமரசமற்ற போராட்டத்தின் துவக்கம் ஜனநாயக சக்திகளுக்கு புது ரத்தத்தை பாய்ச்சியது!

**- பு.ஜ. செய்தியாளர், மதுரை.**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05

# சூத்துக் கழுவ தண்ணியில்லாத நாட்டில... ஆத்துத் தண்ணி தனியார்மயம்!



**தண்ணீரை வியாபாரமாக்காதே!**

**தண்ணீரைத் தனியார்மயமாக்காதே!**

தண்ணீரைப் பன்னாட்டு நிறுவனங்களின் ஏகபோக உடைமையாக்கும் 'காட்ஸ்' ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம்!

நமது நாட்டை ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாக்கும் உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சியைத் தூக்கியெறிவோம்!

## தாமிரவருணியை உறிஞ்ச வரும்
# அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!

## நெல்லை – கங்கை கொண்டானில்
# மறியல்
## 12, செப்-2005

மக்கள் கலை இலக்கியக் கழகம் - விவசாயிகள் விடுதலை முன்னணி
புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி - புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி
தமிழ்நாடு

படிப்பகம்